உ

கணபதி துணை

சமயத்தொகுதி

இயற்றமிழாசிரியர்

தி. விசாகப்பெருமாளையர்

இயற்றியது

திருமயிலை

சே. வெ. சோமசுந்தரம் பிள்ளை

உதவிய பிரதிக்கிணங்க,

சென்னை, இராயப்பேட்டை

சாது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

உரிமை பதிவு செய்யப்பட்டது 1936 விலை அணா 2

விசாகப் பெருமாளையர்

சமயத் தொகுதியின் ஆசிரியராகிய விசாகப் பெருமாளையர் திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்த கச்சியப்ப முனிவரின் மாணவரான திருத்தணிகைக் கந்தப்பையரின் மூத்த குமாரர். பிரசித்தி பெற்ற சரவணப் பெருமாளையரின் தமையனார். வீர சைவ மதத்தினர். சென்னைப் பிரசிடென்சி காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தியவர். கல்வி விளக்க அச்சுக்கூடம் எனப் பெயரிய அச்சியந்திர சாலையொன்று சொந்தமாக வைத்து அதன் மூலமாகப் பல நூல்களை வெளியிட்டவர். சென்னைத் தங்கசாலை வீதியில் இற்றைக்கு 60 வருடங்களுக்குமுன் வசித்தவர்.

நன்னூற் காண்டிகையுரை (1834), திருக்கோவையாருரை, இலக்கணச் சுருக்க வினாவிடை (1828) முதலியவற்றைப் புதிதாக எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியவர். மழவை மகாலிங்க ஐயர், அ. வீராசாமி செட்டியார் முதலிய பெருந் தமிழ்ப்புலவர்களுக்கு ஆசிரியராக விளங்கியவர்.

1862 - ல் வெளிவந்த உவின்ஸிலோ தமிழகராதிக்கு, இராமாநுஜ கவிராயருக்குப் பின், பெரிதும் உதவி புரிந்தவர்.

உ

கணபதி துணை

சமயத்தொகுதி

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் தம்மாற் செய்யப்பட்ட திருக்குறள் முதலதிகார முதற் செய்யுளில், கண் முதலிய இந்திரியங்களினலே அறியத் தக்க உலகம் கடவுளொருவரை யுடைத்தென்று அனுமானப் பிரமாணத்தினலே அருளிச்செய்தார். அச் செய்யுளாவது,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்பதாம்.

இதன்பொருள்: எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை யுடையன ; அதுபோல உலகு ஆதிபகவனுகிய முதலையுடைத்து.

காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப் படாத கடவுளுக்கு இருப்புச் சொல்ல வேண்டுதலின் உலகம் ஆதிபகவனை யுடைத்தென்ருர். இம்மலை நெருப்புடைத்துப் புகையினல் என்பதுபோல, இந்தப் பிரபஞ்சம் கடவுளையுடைத்து, சிருட்டி, திதி, சங்காரம் என்கிற முத்தொழிற்படுதலால் என்று அறிவிப்பதே அனுமானப் பிரமாணமாம். மேலும் குடமுதலிய காரியமுண்டாவதற்குக் குயவனுகிய நிமித்த காரணன் ஒருவன் உண்டாயிருத்தல் போல, இந்தப் பிரபஞ்சமாகிய காரியமுண்டாவதற்கு நிமித்தகாரணனுகிய ஈசுவரன்

ஒருவனுண்டென்றும், மண்போல மாயையாகிய முதற் காரணம் உண்டென்றும், தண்டசக்கரம்போல நல்வினை தீவினைகளாகிய துணைக்காரண முண்டென்றும், ஆத்மாக்கள் பந்தமோக்ஷத்தை அடையும்படி இவ்வாறு காரியப்படுமென்று மறிக.

மூலப்பிரகிருதியாகிய மாயையினாலும், பரமாணுக்களினாலும் இவ்வுலகம் காரியப்படமாட்டாதாவென்றால், அவ்விரண்டும் அறிவில்லாத சடமாகையால், அறிவுடையவனாலே யல்லாமல், அவைகளால் உலகம் காரியப்படமாட்டாதென்பது நிச்சயமாம். அறிவுடைய சீவர்களால் உலகம் உண்டாகமாட்டாதாவென்றால், அச்சீவர்களிடத்தில் கிஞ்ஜித்துவ முதலிய தோஷமுண்டாயிருக்கையால் அவர்களாலு முண்டாகமாட்டாது. ஆகையால், சர்வஞ்ஞனாகிய ஈசுவரனாலேயே காரியப்படுமென்று நிச்சயிக்கப்படும். உலகத்தை உண்டாக்குகையாகிய காரியம் மிகவும் பெரிய காரியமாகையால், தேரைச் செய்கிறதற்குப் பலர் வேண்டியிருப்பது போல அநேக கர்த்தாக்கள் வேண்டுமென்றால், ரதாசாரியனாகிய ஒருவனாலேயே அந்த ரதம் உண்டாகிறதினாலும், அநேகராலே யாதொரு காரியமும் உண்டாகாதாதலாலும், பிரபஞ்சத்திற்கு ஈசுவரன் ஒருவனே கர்த்தாவாக இருக்கவேண்டும். இவைகளைப்பற்றி ஆதி பகவன் முதற்றே யென்றார்.

அந்த ஈசுவரனுக்கு, எக்காலத்திலும் எவ்விடத்திலும் காரியம் உண்டாகவேண்டி யிருப்பதால், நித்தியத்துவமும்,வியாபகத்துவமும், எல்லாக்காரியமும் அறிந்து செய்யவேண்டியிருத்தலால் சர்வஞ்ஞத்துவமும், தனக்

கொரு கர்த்தாவில்லாமல் தானொருவனாகிய இருக்கையால் சர்வ சுதந்தரத்துவமும், ஆத்மாக்கள் செய்த கர்மத்துக்கீடாகச் சுக துக்கங்களைக் கொடுக்கும்படி தேகாதிகளைச் சிருட்டியாதி செய்வதற்கு வேறு சமர்த்தர்களில்லாமையால் சர்வேசுவரத்துவமும் உண்டு. அந்த ஈசுவரன் சிருட்டியாதித்தொழில் செய்வதைப் பற்றிப் பிரமா, விஷ்ணு, ருத்திரன் என மூன்று பிரதான நாமங்களாற் சொல்லப்படுகின்றான். ஆதலால் கர்த்தா ஒருவனேயன்றிப் பலரல்லர். இப்படியிருக்கச் சைவர்கள் சிவனொருவனே கர்த்தாவென்றும், மற்றிருவருங் கர்த்தாவல்லரென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணு ஒருவனே கர்த்தாவென்றும், மற்றிருவருங் கர்த்தா அல்லரென்றும் கூறுகின்றார்களேயென்றால் சைவர்கள் சிவனென்கிற நாமத்தினாற் சொல்லப்பட்ட பொருளே முத்தொழிலிற்குங் காரணமென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவென்னும் நாமத்தினாற் சொல்லப்பட்ட பொருளே முத்தொழிற்குங் காரணமென்றும் சொல்லுதலினாலே அவ்விரு சமயத்தாரும் கர்த்தா ஒருவரென்றே கூறுகின்றாரேயல்லாமல் பலரென்று கூறுகின்றிலர்.

இவைகளைக் கூறுகின்ற முதனூல்கள் வேதாகமங்களாம். அவைகளுள், வேதம்—இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும். இவ்வேதத்தைச் சிலர் சுயம்புவென்றும், சிலர் ஈசுவரனாற் சொல்லப்பட்டதென்றும் சொல்லுவார்கள். இருக்குவேதமென்கிற விருக்ஷம் இருபத்தொரு கிளைகளையுடையது. எசுர்வேதமென்கிற விருக்ஷம் நூற்றொருகிளைகளையுடையது. சாமவேதமென்கிற விருக்ஷம் ஆயிரங்கிளைகளை

யுடையது. அதர்வணவேதமென்கிற விருக்ஷம் ஒன்பது கிளைகளையுடையது. இவ்வேதங்களுள் ஒவ்வொன்றும் கர்மகாண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டமென மும் மூன்று வகைப்படும். இவைகளுள் கர்மகாண்டமாவது சோதிஷ்டோமம் முதலியபுண்ணிய கருமங்களைக்கூறுவதாம். சோதிஷ்டோமமாவது சொர்க்கத்தை விரும்புவோராலே செய்யப்படும் ஒரு யாகமாம். பக்திகாண்டமாவது ஈசுவரனிடத்திலே செய்யும் பக்தியைக் குறித்துக் கூறுவதாம். ஞானகாண்டமாவது சரீர முதலியவைகளின் நிலையாமையைக் கண்டு, யான் எனது என்கிற இருவகைப் பற்றுமற்று, முத்தியை அடைதற்கு வழியாகிய உண்மை ஞானத்தைக் கூறுவதாம். இந்த ஞானத்தை வேதங்களின் அந்தத்திலுள்ள உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன.

இந்த உபநிஷத்துக்களின் அர்த்தங்களை, வியாசருஷி பிரம சூத்திரமென்று பெயர் கொடுத்து, நான்கு அத்தியாயமாக ஒரு நூல் செய்திருக்கின்றார். அதற்கு வேதாந்த சாஸ்திரமென்று பேர். இதற்குச் சங்கராசாரியர், பிரமத்திற்கும் ஆத்மாவிற்கும் ஐக்கியமென்று அத்துவிதத்தைச் சாதித்துச், சங்கரபாஷியமென்று ஒருபாஷியஞ் செய்திருக்கிறார். அதனால் அத்துவித மதமும், நீலகண்டாசாரியர், ஈசுவரன் ஆண்டவனென்றும், ஆத்துமாக்கள் அடிமைகளென்றும், ஆத்துமாக்கள் பாசத்தைப் பொருந்தி யிருப்பவை யென்றும், பந்தகாலத்திலும் முத்திகாலத்திலும் ஈசுவரன் ஆத்மாக்களோடு வேறறக் கலந்து நிற்கிறானென்றும், ஈசுவரன், ஆத்மா, பாசம் என்பவைகளினியல்பு இவ்வாறென்றும்,

ஆத்மாக்கள் பாசநீங்கி முத்தியடையும் வழி இப்படியென்றுங் காட்டி நீலகண்டபாஷியமென்று ஒரு பாஷியம் செய்திருக்கிறார். இதனால் விசிஷ்டாத்வித மதமும், இராமானுஜாசாரியார், விசிஷ்டாத்துவிதத்தையே சாதித்து, இராமானுஜ பாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறார். இதனாலும் விசிஷ்டாத்வித மதமும், மத்வாசாரியார், ஈசுவரனும் ஆத்மாவும் கலப்பின்றி வேறாயிருக்கின்ற இரண்டு பொருளென்று, துவிதத்தையே சாதித்து, மத்துவ பாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறார். இதனால் துவிதமதமும் வழங்கி வருகின்றன.

சைமினிபகவான் வேதங்களில் கர்மகாண்டத்தை மேற்கொண்டு, சோதிஷ்டோம முதலிய புண்ணிய கருமங்களை சுவர்க்க முதலிய பதங்களைத் தருமென்று சாதித்துப், பன்னிரண்டத்தியாயமாகப் பூர்வமீமாஞ்சையென்று ஒரு நூல் செய்தார். இந்த நூலில், வேதம் ஒருவனால் செய்யப்பட்டதன்றி நித்தியமாய் உள்ளதென்றும், பிரபஞ்சம் நித்தியமென்றும், நல்வினை செய்யவேண்டுமென்றும், அந்த நல்வினையே செய்தவனுக்குச் சுவர்க்க முதலிய பலன்களைக் கொடுக்குமென்றும், பூதகாரியமாகிய உடம்புக்கு வேறாய் ஆத்மா உண்டென்றும், ஆத்மா பலவென்றும், ஆத்மாக்களுக்கு வேறாய் ஈசுவரனொருவனில்லை யென்றும் சொல்லப்படும். இந்த மதஸ்தர்கள் நிரீசுவர வாதிகளேயாம்.

ஆகமங்கள் காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அம்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்

புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசர்வோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என இருபத்தெட்டாம். இவ்வாகமங்கள் ஒவ்வொன்றுக்குக் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக் கோடி கிரந்தங்களுள்ளனவாம். இவைகளுக்குச் சைவ சித்தாந்த மென்று பெயர். இவை சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் எனத் தனித்தனி நான்கு பாதங்களை யுடையனவா யிருக்கும். சரியாபாதத்தில், சிவாலயங்களில் திருவிளக்கிடுதல் முதலியன கூறப்படும். கிரியாபாதத்தில் சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், ஓமம், தீக்ஷைமுதலியவை கூறப்படும். யோகபாதத்தில் மனம் அடங்கும்பொருட்டு வாயுவை நிறுத்துதல்முதலியவை கூறப்படும். ஞான பாதத்தில் கர்த்தா, ஆத்மா, பாசம் என்னும் இம்மூன்றும் அநாதியா யிருப்பவையென்றும், இவைகளுள் கர்த்தா,சித்துஞ் சடமுமான எல்லாப் பிரபஞ்சத்திற்கு மேலானவனும், நின்மலனும், எகனும், நித்தியனும், அளவில்லாத அறிவும் அளவில்லாத வல்லமையும் உடையவனும், அகண்டனும், அவிகாரியாயும் இருப்பவனென்றும், ஆத்துமாக்கள் அளவுபட்ட ஆயுளும் அளவுபட்ட போகமும் உடையவையாயும், நித்தியமாய் வியாபகமாய் இருப்பவையாயும், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவையாயும், நல்வினை தீவினைகளைச் செய்து அவ்வினைப் பயனை அனுபவிப்பவையாயும், தமக்கு ஒரு கர்த்தாவை உடையவையாயும் இருப்பவையென்றும், பாசம் ஆத்மாக்களைப்பற்றி நிற்பதென்றும்,

ஆத்துமாக்கள், பலகோடி சனனங்களிலே, பரமசிவனை நிஷ்காமியமாகப்பூசித்துவந்த தவப்பயனாலே, இருவினையொப்புவந்து, சற்குரு கடாக்ஷத்தினாலே, சிவஞானம் பெற்று, அச்சிவ ஞானத்தினால் பாசவொழிவையும் பெற்று: முத்தியடையுமென்றும் கூறப்படும்.

சாங்கியமதம்

கபிலமுனிவராலே செய்யப்பட்ட சாங்கிய நூலில், தேகாதி பிரபஞ்சத்திற்குக் காரணமான அருவாய் நித்தியமாய் வியாபகமாய்ச் சடமாய் இருக்கும்மாயை உண்டென்றும், வியாபகமாய் அருவாய் நானாபேதமாய் அறிவுமாத்திரமாய் இருக்கும் ஆத்மா உண்டென்றும், இந்த ஆத்மாக்களுக்கு அநாதியே புத்தியைச்சேர்ந்த அஞ்ஞான வசத்தால் சுகதுக்க ஞானம் உண்டென்றும், மாயையையும் ஆத்மாவையும் பகுத்தறியும் விவேக ஞானத்தினாலே அஞ்ஞானம்நீங்கி ஆத்மா முத்தியடையுமென்றும், ஆத்மாக்களுக்கு வேறாய் ஈசுவரனொருவனில்லையென்றும் சொல்லப்படும். இந்த மதஸ்தர்களை நிரீசுவரவாதிகளென்று சொல்லவேண்டும்.

பாதஞ்சலமதம்

பதஞ்சலிமுனிவராலே செய்யப்பட்ட பாதஞ்சல நூலில் எல்லாப் பிரபஞ்சத்திற்குங் காரணமான மாயையும் அறிவுமயமான ஆத்மாவும் உண்டென்றும், எல்லாவற்றையும் அதிஷ்டித்து நிற்பவனும் உண்மை ஞானத்தை உபதேசிப்பவனும் இருக்கின்ற ஈசுவரனொருவன் ஆத்மாக்களுக்கு வேறாயிருக்கின்றானென்றும் சொல்லப்படும்.

வைசேஷிகமதம்

கணாதமுனிவராற் செய்யப்பட்ட வைசேஷிக நூலில், ஆத்மா நித்தியமாய் அருவாய் வியாபகமா யிருக்குமென்றும், அந்த ஆத்மா பரமாத்மா சீவாத்மா வென இருவகைப்படுமென்றும், பரமாத்மா ஈசுவரனென்றும், சீவாத்மா உடம்புதோறும் வேறாய்ப் பலவாயிருக்குமென்றும், ஆத்மாக்கடோறும் ஞானத்துக்கு ஏதுவான மனமிருக்குமென்றும், ஆத்மாவுக்கு மனத்தோடு சையோகத்தால் ஞான முண்டாகுமென்றும், அதனாலேயே புண்ணிய பாவங்களாகிய கர்மானுஷ்டானங்களுண்டாகுமென்றும், எல்லாம் வல்லவன் ஈசுவரனென்றும், அந்த ஈசுவரனுக்கு மனத்தோடு தசயோகத்தினாலே ஞானமுண்டாகுமே யல்லாமல் இயற்கை ஞானமில்லையென்றும், இப்படியே பதார்த்தங்களின் பொது இயல்பு வேற்றியல்புகளையறியும் ஞானத்தால் ஆத்மாக்களுக்குக் கர்மம் நசிக்குமென்றும், கர்மம் நசிக்கவே மனத்தோடு சையோகத்தால் தோன்றும் ஞானமின்றிக் கல்லைப்போலக் கிடப்பதே முத்தியென்றும், வேதம் ஈசுவரனாலே சொல்லப் பட்டதென்றும் கூறப்படும்.

நியாயவாதம்

அக்ஷபாத முனிவராற் செய்யப்பட்ட நியாயநூலிலும் முத்தி இவ்வாறே கூறப்படும்; ஆதலால் இந்த மதத்தை விரித்துச் சொல்லவில்லை.

சத்தப்பிரமவாதிமதம்

சத்தப் பிரமவாதிகள் பிரளயகாலத்தில் ஈசுவரன் சத்தவடிவா யிருப்பானென்றும், சடசித்துக்களாய்த்

தோன்றியழியும் எல்லாப்பொருள்களும் சத்தத்தினுடைய விகாரமென்றும், சத்தரூபமே முழுதுமென்றறிவதே மோக்ஷமென்றும் சொல்வார்கள்.

கிரீடாப்பிரமவாதிமதம்

கிரீடாப்பிரமவாதிகள் பிரமமே நானென்றும், நான் ஒருபடித்தாயிராமல் பலவகையாய் நானாவிதமான விகாரப்பொருள்களோடுகூடி விளையாடுகிறேனென்றும், இப்படி அறிகிறதே மோக்ஷமென்றுஞ் சொல்வார்கள். இந்த இரண்டுமதங்களுக்கும் நூல்செய்தவர் வியாசரென்று சொல்லுகிறார்கள்.

பாஞ்சராத்திரமதம்

பாஞ்சராத்திரிகள் வாசுதேவனென்றொரு பரம்பொருளுண்டென்றும், அந்தப்பரம்பொருளிலிருந்து கிருஷ்ணன், அனுருத்தன், மகரத்துவஜன், ரௌக்கிணேயன் என்னும் நாலு வியூகங்கள் சகத்தைப்படைத்தற்பொருட்டுத் தோன்றுமென்றும், இந்த நான்கினாலே சடமும் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டனவென்றும், எல்லாம் வாசுதேவன் வடிவமென்றும், பாஞ்சராத்திர மென்கிற நூலிற் சொல்லப்பட்ட முறையே தீக்ஷைசெய்துகொண்டு வாசுதேவனை வழிபட்டு வாசுதேவன் வடிவில் லயமாவதே முத்தியென்றும் கூறுவர்.

பாசுபதமதம்

பாசுபதமதஸ்தர் ஆத்துமாக்கள் பலவாய் நித்தியமாய் வியாபகமாய்க் காரணகாரியத் தொடர்ச்சியாலுண்டாகும் ஞானத்தால் வேறுபாடுடையவையா யிருக்கு

மென்றும், பாசங்களாற் சுகதுக்கங்களையனுபவிக்குமென்றும், வைராக்கியமுண்டாய்ப் பாசுபதநூலிற் கூறு முறையே தீக்ஷைபெற்ற ஆத்மாக்களிடத்தில் பசுபதியினுடைய ஞானமுதலிய குணங்கள் பற்றுமென்றும், அவ்வாறு பசுபதியின் குணங்களையடைந்த ஆத்மாவினிடத்தில்முன் பசுபதியாயிருந்தவர் தன்னதிகாரத்தை வைத்துத் தானொழிவு பெற்றிருப்பாரென்றும் சொல்லுவார்கள். இவர்களையும் நாஸ்திகரென்றே சொல்லவேண்டும்.

மாவிரதமதம்

மாவிரதர் ஆத்தும லக்ஷணம் பாசுபதர் கூறிய முறைப்படியே தங்கள் கொள்கையுமாமென்றும், ஆத்மாக்களுக்குப் பந்தகாலத்திலும் முத்திகாலத்திலும் ஞானசத்தியேயன்றிக் கிரியாசத்தியில்லை என்றும், மாவிரத நூலிற் சொல்லியபடியே தீக்ஷை செய்துகொண்டு அதிற்சொல்லப்படும் தருமங்களை அனுஷ்டிக்கும் ஆத்துமாக்கள் மோக்ஷத்தை அடையுமென்றும், மோக்ஷத்தை அடைந்த ஆத்துமாக்களுக்குக் கேவல ஞான சத்திமாத்திர முண்டென்றும், ஈசுவரனொருவனுக்கே ஞானசத்தியுங் கிரியாசத்தியுமுண்டென்றுஞ் சொல்லுவார்கள்.

காபாலிகமதம்

காபாலிகமதஸ்தர் ஆத்துமலக்ஷணம் பாசுபதர் மாவிரதர் சொல்லிய முறைப்படியே யிருப்பதென்றும், காபாலியநூலிற் கூறியவிதிப்படியே தீக்ஷைபெற்றுக் கொண்டு அந்நூலிற் சொல்லப்படுகிற அறங்களின்படி நடந்தால் முத்தியுண்டாகுமென்றுஞ் சொல்லுவார்கள்.

அந்த மோக்ஷம் மாவிரதர் சொல்லிய மோக்ஷ முறையை யொத்திருக்குமென்றறிக.

அநேகேசுவரவாதிகள்மதம்

அநேகேசுவரவாதிகள், தேர்முதலியவை செய்யும்போது ஒருவனாற் செய்யமுடியாமல் அநேகர் வேண்டியிருத்தல்போலச், சிருட்டியாதிதொழில் செய்வதற்கு அநேக ஈசுவரர் வேண்டியிருக்கிறதென்றும், அநேக ஈசுவரரும் அநேகவுபாதான காரணங்களைக் கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்வாரென்றும், ஆத்துமாக்களும் அநேக ஈசுவரர்களுடைய தொழிலாலே சனனமரணப்படுவார்களென்றும், ஒரு தொழிலைச் செய்யும் அநேகர் உபகாரணமில்லாதவிடத்துத் தொழிலை விடுகிறதுபோல ஈசுவரர்களும் கர்மமாகிய உபகரணங்கள் இல்லாதவிடத்து ஆத்துமாக்களிடத்திற் சிருட்டியாதி தொழில் செய்யார்களென்றும், அப்படித்தொழிற்படாதிருப்பதே அவைகளுக்கு முத்தியென்றுங் கூறுவர்.

சாக்தமதம்

சாக்தமதஸ்தர் சத்தியே பிரமமென்றும் அச்சத்தியினிடத்திலிருந்து பிரமா, விஷ்ணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவனென்கிற பஞ்சகர்த்தாக்களும், பஞ்சசத்திகளும் உண்டானார்களென்றும், இவர்களாலே சகத்காரியம் உண்டாயிற்றென்றும், சத்திக்கு மேலே வேறொரு ஈசுவரனில்லையென்றுங் கூறுவர்.

வைரவமதம்

வைரவமதஸ்தர் வைரவனே பிரமமென்றும், அவனுக்குமேல் வேறொரு ஈசுவரனில்லையென்றுங் கூறுவர்.

காணுபதமதம்

காணுபத மதஸ்தர் கணபதியே பிரமமென்றும், அவர்க்கு மேல் ஒரு ஈசுவரனில்லையென்றும், அவராலேயே சகலமுங் காரியப்படுகின்றனவென்றுங் கூறுவர்.

கௌமாரமதம்

கௌமாரமதஸ்தர் சுப்பிரமணியரே பிரமமென்றும், அவர்க்கு மேல் ஒரு ஈசுவரனில்லையென்றும், அவராலேயே சகல சகத்காரியமும் உண்டாகின்றன என்றுஞ் சொல்லுகின்றார்கள்.

சிவசமவாதிகள்மதம்

சிவசமவாதிகள் முத்தியடைந்த ஆத்துமா, ஈசுவரனுக்குண்டாகிய குணங்களெல்லாம் பெற்று, ஈசுவரனுக்குச் சமானமாயிருக்குமென்று கூறுவர்.

அச்சுமாறுவாதிகள்மதம்

அச்சுமாறுவாதிகள், ஆத்துமாக்கள் சனனத்தையடையும்போது முன் ஆணுயிருந்தது ஆணுகவும், முன் பெண்ணுயிருந்தது பெண்ணுகவும் பிறக்குமென்றும், சிவபூசையின் பயனுல் பிறவியொழிந்து சிவ சந்நிதியிலே அச்சுமாறுமலே யிருக்குமென்றும் சொல்லுவார்கள்.

உலோகாயதமதம்

உலோகாயதமதஸ்தர் காட்சியொன்றே பிரமாணமென்றும், பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்கிற நான்கு பூதங்களே மெய்ப்பொருளென்றும், இந்நான்கு பூதங்களின் கூட்டங்களால் அறிவு உண்டாகு மென்றும்,

சரீரம் வளர அறிவுவளருமென்றும், சரீரந்தேய அறிவு தேயுமென்றும், இவ்வறிவைவிட ஆத்துமா வேறில்லையென்றும், இந்நான்கு பூதங்களுஞ் சடமாதலால் அவை தாமே கூடிக் காரியப்படமாட்டாவே அவற்றைக் காரியப்படுத்துவதற்குச் சர்வஞ்ஞன் ஒருவன் வேண்டுமென்றால் அவ்வீசுவரனைப்படைத்து அவனுக்கு ஞானமுதலியவற்றைத் தருதற்கு வேறொரு ஈசுவரன் வேண்டுமென்று அநவஸ்தாதோஷ முண்டாகையால் அவனுக்கு ஒரு ஈசுவரன் வேண்டியதில்லை யென்று சொல்லி நிறுத்துவதை இப்பூதங்களுக்கு வேறொரு கர்த்தா வேண்டுவதில்லை யென்று நிறுத்துவது நன்றென்றும், இம்மையிற் சுகமே சுவர்க்கமென்றும், துக்கமே நரகமென்றும், சரீர மழிந்தபின் மேலைக்காவதோர் வினையிருப்பதில்லை யென்றும் கூறுவார்கள்.

பௌத்தமதம்

பௌத்த மதஸ்தர் பஞ்சபூதத்தினுலாகிய சரீரத்தில் புத்திதத்துவமே யுள்ளதென்றும், புத்தி தத்துவ முதலிய எல்லாப் பொருள்களும் க்ஷணபங்கமென்றும், ஆத்துமாவும் ஈசுவரனுமில்லை யென்றுஞ் சொல்லுவார்கள். பௌத்த நூலிற் சொல்லப்படும் மோக்ஷமாவது தண்ணீரோட்டம்போல நித்தியமாய் அனுபவிக்கப்படும் இன்ப துன்பத் தொடர்ச்சியின்றிச் சுத்தமான ஞான மென்பதே. இப்பௌத்தத்தில் சௌத்திராந்திகம், வைபாடிகம், மாகாயாநிகம், மாத்திமிகம் என நால்வகைப் பேதங்களுண்டு. மேற்கூறிய உலோகாயதமத

மும் இப்பௌத்தமதமும் நாஸ்திக மதமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆருகத மதம்

ஆருகதர்கள், அருகனென்றொருகடவுளுண்டென்றும், ஆத்துமாக்கள் அநாதியே குற்றமுடையவையென்றும், அவை தூலதேகம் வளர வளருமென்றும், அது தேயத் தேயுமென்றும், ஆத்துமாக்கள் அருகநூலிற் சொல்லப்படும் சுடுபாறையிற் கிடத்தல் முதலிய தவங்களாலும், உயிர்க்கொலை முதலிய பாவங்களை நீக்குதலாலும், அருகநூற் பொருள்ஞானத்தினாலும், அருகனைப் போலக் குற்றந் தீர்ந்தவையாமென்றும், அதுவே முத்தியென்றும், அருகனும் இவ்வாறே முத்தியடைந்தானென்றும் கூறுவார்கள். இந்த ஆருகதமதஸ்தர்களில் விசேஷமாய்ச் சந்நியாசிகள் தலைமயிரை வளர்த்தாலும், சிரைத்தாலும், பேன்முதலியவை உண்டாய் நசிக்குமென்று அம்மயிர் சிறிதாயிருக்கும்போதே சில கருவிகளைக்கொண்டு பறித்தலும், சீலைப்பேன் பிடியாமலிருக்கும்படி கடுக்காய்ச்சாயந் தோய்த்த வஸ்திரத்தைத் தரித்தலும், எறும்பு முதலியன சாகாதிருக்கும்படி வழிநடக்கையில் மயிலிறகின் கற்றைகளால் விளக்கிக்கொண்டு நடத்தலும், விளக்கு வைத்துக்கொண்டு புசித்தால் அவ்விளக்கில் விட்டில் முதலிய பூச்சிகள் விழுந்து இறக்குமென்று கருதி சூரியன் அத்தமனமாதற்கு முன்பே புசித்தலும், தண்ணீரிலிருக்கும் ஜெந்துக்கள் இறவாமலிருக்கும்படி பலகால் வடித்துக் குடித்தலுமாகிய இவ்வாறான அஹிம்சா தர்மங்களையே அனுஷ்டித்துக்கொண்டு வருவார்கள்.

சௌரமதம்

சௌரமதஸ்தர், சூரியனே பிரமமென்றும், அதற்கு மேல் ஒரு ஈசுவரனில்லையென்றுங் கூறுவர்.

சாந்திரமதம்

சாந்திரமதஸ்தர், சந்திரனே பிரமமென்றும், அதற்கு மேல் ஒரு ஈசுவரனில்லையென்றுங் கூறுவர்.

நவக்கிரகமதம்

நவக்கிரக மதஸ்தர், நவக்கிரகங்களுக்கு மேல் ஈசுவரனொருவனில்லையென்றும், நவக்கிரகங்களே ஆத்துமாக்களுடைய புண்ணிய பாபங்களுக்கீடாய்ச் சுகதுக்கங்களையும், சனன மரணங்களையுங் கொடுக்கின்றனவென்றுங் கூறுவர்.

பஞ்சபூதாத்துமவாதிகள்மதம்

பஞ்சபூதாத்துமவாதிகள், பஞ்சபூதங்களுக்குமேல் ஒரு ஈசுவரனில்லையென்றும், இப்பஞ்சபூதங்களின் கூட்டங்களாலே தேகாதிப்பிரபஞ்சங்களுண்டாகின்றனவென்றுங் கூறுவர்.

இந்திரியாத்துமவாதிகள்மதம்

இந்திரியாத்துமவாதிகள், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சேந்திரியங்களுக்கு மேல் ஈசுவரனொருவனில்லையென்றும், ஆன்மா வொன்றில்லையென்றும் கூறுவர்.

அந்தக்கரணாத்துமவாதிகள்மதம்

அந்தக்கரணாத்துமவாதிகள், மனம் புத்தி சித்தம் ஆங்காரம் என்கின்ற அந்தக்கரணங்களுக்கு மேல் ஈசு

வர னொருவனில்லையென்றும், ஆத்துமா வொன்றில்லை யென்றுங் கூறுவர்.

பிராணாத்துமவாதிகள்மதம்

பிராணாத்துமவாதிகள், பிராணவாயுவுக்குமேல் ஈசுவர னொருவனில்லை யென்றும், ஆத்துமா வொன்றில்லை யென்றுங் கூறுவர்.

சூனியவாதிகள்மதம்

சூனியவாதிகள், ஈசுவர னொருவனிருந்தால் காணப் படமாட்டானா? காணப்படாமையால் ஈசுவரனில்லை யென்பர்.

சௌரமத முதலாகச் சூனியவாதி மதமீறாகச் சொல்லப்பட்ட மதங்களெல்லாம் நாஸ்திக மதங்களாம்.

இம்மதங்களின் வேறுபாடுகளையும், இன்னும் பழமையாய் வழங்கிவரும் பல மதங்களையும், இத்தேசத்தில் நவீனமாய் வழங்குகின்ற சிலமதங்களையும், சொல்லப் புகுந்தால் விரியுமென்றொழித்தாம்.

சமயத்தொகுதி முற்றிற்று.

சமயத்தொகுதி - முதற்பதிப்பு 1867௵

சமரச தீபம்

ஆக்கியோர்:

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

1934.

கோயில் தெரு, காஞ்சீபுரம்.

உரிமை
ஆக்கியோருடையது.

விலை அணா 2.

முன்னுரை

உலகம் இப்பொழுது எந்நிலையில் இருக்கிறது? அதைச் சொல்லவும் வேண்டுமோ! உலகம் இயற்கைச் சன்மார்க்கத்தினின்றும் வழுவிச் செயற்கைத் துன்மார்க்கத்தில் வீழ்ந்து வருகிறது. இது கண்கூடு. இவ்வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் என்னை? மக்கள் அறியாமையால் அரசியலுக்கும், புரோகிதத்துக்கும் அடிமைப்பட்டு இரையாகி வருவதைச் சிறந்த காரணமாகக் குறிக்கலாம்.

ஆங்காங்குள்ள அரசியல் வாதிகள், பேர், புகழ், தன்னலம் முதலியவற்றைக் குறிக்கொண்டு, குடியாட்சி என்றும் - கோனாட்சி என்றும் - குடிக்கோனாட்சி என்றும் - பலதிற அரசுகளை வகுத்து, மக்களை மயக்கி, ஒருபக்கம் வஞ்சித்து வருகிறார்கள்; மற்றொருபக்கம் புரோகிதர்கள் நின்று, பலதிறக் கண்மூடி வழக்க ஒழுக்கங்களை நாளுக்குநாள் பெருக்கி மக்களை ஏமாற்றி வஞ்சித்து வருகிறார்கள். இவ்விரு வழியிலும் மன்பதை நெருக்குண்டு துன்புறுகிறது. வஞ்சனைகள் பெருகப் பெருக, உலகம் சன்மார்க்கத்தினின்றும் வழுக்கி வீழ்தல் இயல்பன்றோ?

துன்மார்க்க வீழ்ச்சிக்கு அழிவுவேலை ஒருபாலும், சன்மார்க்க எழுச்சிக்கு ஆக்கவேலை மற்றொருபாலும் நடந்துவருதல் வேண்டும். அழிவும் ஆக்கமும் சேர்ந்த ஒன்றே சீர்திருத்தம் என்பது.

இந்நாளில் உலகமுழுவதும், சீர்திருத்தத்தை விரும்புவது வெள்ளிடைமலை. இவ்விருப்பம் இயற்கை அன்னையின் ஏவலால் எழுவதாகும். இயற்கை அன்னை உலகைச் செப்பஞ்

செய்ய, மறக்கருணையையும் அறக்கருணையையும் சொரிந்து வருவதை அறிஞர் தமது கூர்த்தமதியால் உணரலாம். மறக்கருணை அழிவுக்குத் துணைசெய்வது; அறக்கருணை ஆக்கத்துக்குத் துணைசெய்வது. இயற்கை அன்னையின் வழி நின்று தொண்டாற்றவேண்டுவது அன்பர் கடமை.

உலகில் பலதிற இயக்கங்கள் எழுந்துகொண்டே இருக்கின்றன. அவ்வவ்வியக்கத்தில் ஈடுபடும் அறிஞர், அதை அதைச் சன்மார்க்கத்தில் செலுத்த முயலல்வேண்டும். இம் முயற்சிக்கு ஒல்லும்வகையாதல் துணைபோகவேண்டுமென்பது எனது தணியாவேட்கை.

பலதிற மகாநாடுகளில் தலைமை வகிக்கும் பேறு எனக்கு அடிக்கடி வாய்ப்பதுண்டு. அம்மகாநாடுகளில் குறிக்கத்தக்கன சில. அச்சிலவற்றுள் மாயவரத்தில் கூடிய **சமரச சன்மார்க்க மகாநாடும்** ஒன்று. அம்மகாநாடு, ஒருவித சரித்திர சம்பந்தமுடையதாகலின், அதைப்பற்றி இம்முன்னுரையில் மிகச் சுருங்கிய முறையிலாதல் கூறுதல் பொருத்தமென்று யான் கருதுகிறேன்.

வாழ்வில் பெறுதற்கு எளியன பல; அரியன சில. அவ்வரியனவற்றுள்ளும், அரியது ஒன்றுளது. அஃது எது? அதுவே, நட்பு என்பது. "செயற்கரிய யாவுள நட்பின்" என்றார் **திருவள்ளுவனர்.**

யான் பலதிற உலகில் உலவும் பேறுடையேன். தமிழ் உலகு, சமய உலகு, அரசியல் உலகு, தொழிலாளர் உலகு, சீர்திருத்த உலகு முதலிய பல உலகங்கள் எனக்கு உண்டு. இப்பல உலகில் உலவுவது எனது இயல்பாகி விட்டது. ஒவ்வோர் உலகிலும் உரிய நண்பர் சிலர் எனக்கு வாய்த்துள்ளார். பொல்லாதது என்றும், நட்புக்குரிய ஈரமில்லாதது என்றும் சொல்லப்படும் தற்கால அரசியல் உலகிலும் இரண்டொரு நண்பரை

யான் பெற்றேன். அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் ஒருவர். அவர், திருமிகு - **ஈ. வே. இராமசாமி நாயக்கர்** ஆவர்.

திருமிகு - இராமசாமியாரது நட்பு, முதன்முதல் எனக்கு 1919-ம் ஆண்டில் கிடைத்தது. அன்று முதல் அவரும் யானும் நண்பராகித் தமிழ்நாட்டுக் காங்கரஸில் சேவை செய்து வந்தோம். 1925-ம் ஆண்டு முதல், நண்பர் நாயக்கருக்குக் காங்கரஸ் பற்று, படிப்படியாகக் குறையலாயிற்று. இதற்குக் காரணம், 'சில கூட்டத்தார் சூழ்ச்சி' என்று சொல்லப்பட்டது.

1925-ம் ஆண்டின் இறுதியில் காஞ்சியில் எனது தலைமையில் தமிழ்நாட்டுக் காங்கரஸ் (தமிழ் மாகாண மகாநாடு) கூடிற்று. அதில் நண்பர் இராமசாமியாரும், மற்றுஞ் சிலரும் சேர்ந்து ஒரு தீர்மானம் கொணர்ந்தனர். தலைவன் என்ற முறையில், நீதிநெறி நின்று, பொருந்திய காரணங்கூறி, அத்தீர்மானத்தைத் தள்ளும் நிலைமை எனக்கு ஏற்பட்டது. அச்செயல், நண்பர் நாயக்கருக்குச் சீற்றமூட்டிற்று. அதன் பயனாக, அவர், காங்கரஸ் கொள்கைக்கு மாறுபட்ட 'ஜஸ்டிஸ்' கட்சிக்கு வெளிப்படையாக ஆதரவு நல்கத் துணிவு கொண்டனர். அதனால், அவருக்கும் எனக்கும் அரசியலில் கருத்து வேற்றுமை அரும்பலாயிற்று.

1926-ம் ஆண்டு இறுதியில், அதுபோழ்து தமிழ்நாட்டுக் காங்கரஸ் நிருவாகக் கூட்டத்தவரா யிருந்தவருள் பெரும்பான்மையோர் ஒன்றுசேர்ந்து (கான்பூர்) காங்கரஸ் நிறைவேற்றிய தீர்மானங்கள் சிலவற்றுக்கு மாறுபட்டு நடக்க உறுதி கொண்டனர். அதற்குத் துணைநிற்க எனது மனச்சான்று இடங்கொடுக்கவில்லை. அதனால், தமிழ்நாட்டுக் காங்கரஸ் நிருவாகக் கூட்டத் தொடர்பைமட்டும் யான் அறுத்துக் கொண்டேன்; காங்கரஸில் சாதாரண அங்கத்தினனாக இருந்து காலங்கழிக்கலானேன்.

நண்பர் இராமசாமி நாய்க்கர் முயற்சியால் 1927-ம் ஆண்டில் மாயவரத்தில் 'ஜஸ்டிஸ்' கட்சிச் சார்பில் ஒரு பெரிய மகாநாடு கூடிற்று. அம்மகாநாட்டிற்கு இப்பொழுது சென்னை அரசாங்கத்தில் சட்ட அமைச்சராக உள்ள **ஸர். கிருஷ்ணன் நாயர்** தலைமை வகித்தார். தமிழ்நாட்டில் கூடிய பல மகாநாடுகளில் அதனை ஒரு சிறந்த மகாநாடென்றே கூறலாம்.

அம்மகாநாட்டுப் பந்தரில், எனது தொண்டும் ஏதாவது நிகழ்தல்வேண்டும் என்று நண்பர் நாயக்கர் உள்ளிட்ட சிலர் விரும்பினர். அவ்விருப்பம், **சமரச சன்மார்க்க மகாநாடாக** உருக்கொண்டது. அதற்குரிய தலைமைப் பதவி எனக்கே வழங்கப்பட்டது.

இரண்டு மகாநாடுகளும் ஒரே இடத்தில் கூட நேர்ந்தமையால், 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவர்களில் ஏறக்குறைய எல்லாரும் சமரச சன்மார்க்க மகாநாட்டிலும் கலந்து அளவளாவினர். மகாநாடு முடிந்த பின்னை, 'ஜஸ்டிஸ்' கட்சித்தலைவர்களிடம் விடைபெற யான்போனேன். அப்பொழுது, 'ஜஸ்டிஸ்' கட்சியின் பெருந்தலைவரும், இராஜதந்திரத்தில் தலைசிறந்தவரெனப் பேர்பெற்றவரும், எனது கெழுதகை நண்பருள் ஒருவருமாகிய **பனகால் ராஜா அவர்கள்**, என்னைப் பார்த்து, "உங்களுக்கு எங்கள் அரசியல் பிடிப்பதில்லை. உங்கள் சமூக சீர்திருத்தம் எங்களுக்குப் பிடிக்கிறது. இது சன்மார்க்க மகாநாட்டில் நன்கு விளங்கிவிட்டது. ஆகவே, சமூக சீர்திருத்தத்தில் நாம் அனைவரும் ஏன் ஒன்றுசேர்ந்து உழைத்தல்கூடாது?" என்று கேட்டார்கள். "அப்படியே செய்யலாம்" என்று புன்முறுவலுடன் கூறி,யான் விடைபெற்றுத் திரும்பினேன்.

சில திங்கள் கழிந்தன. நண்பர் நாயக்கரது "குடியரசு" பத்திரிகையினின்றும் புதுப்புது பாணங்கள் கிளம்பின. அப் பாணங்கள் எனக்கென்றே செப்பஞ் செய்யப்பட்டனவோ என்று யான் ஐயுற்றேன்; அவ்வாறே உலகமும் ஐயுற்றது.

கடவுளைப்பற்றியும், அடியார்களைப் பற்றியும் யான் மாறுபடும் முறையில் "**சுயமரியாதை**" என்னும் பெயரால் "குடியர" சில் பாணங்கள் பூட்டப்பட்டன. அப்பாணங்களால், "சன்மார்க்க மகாநாடு கொண்ட சமூகசீர்திருத்த முறைகளைப் பரப்புதற்கு நண்பர் நாயக்கருடன் கலந்து தொண்டு செய்தல் வேண்டும்" என்று யான் கொண்ட எண்ணம் பாழாயிற்று.

சமூக சீர்திருத்தத்தில் நாயக்கருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை இல்லையாயினும், கடவுள் நெறியில் அவருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அவ்வேற்றுமை நாளுக்குநாள் பெருகலாயிற்று. அப்பெருக்கால் தமிழ் நாட்டில் பெரும் புயற்காற்றும் வீசிற்று. பின்னே நாளடைவில், "**சுய மரியாதை**" என்னும் பெயர், ஓர் இயக்கமாகப் பரிணமித்தது. இவ்வியக்கம் தோன்றுதற்குக் காரணமாக நின்றது, மாயவரத்திற் கூடிய சமரச சன்மார்க்க மகா நாடாகலான், அதைப் பற்றி இம் முன்னுரையில் பிரஸ்தாபித்தல் நேர்ந்தது.

நண்பர் நாயக்கர் முயற்சியும், எனது தலைமைக் கூட்டுறவும் ஒன்றிய சன்மார்க்க மகாநாட்டின் பயனாகச் "சுயமரியாதை இயக்கம்" என்னுங் குழவி பிறந்தமையால், அதற்குத் தந்தை நாயக்கரென்றும், தாய் யான் என்றும், அக்குழவி தந்தைவழி வளர்ந்து வருகிறது என்றும் யான் விளையாட்டாகச் சொல்வது வழக்கம்.

மாயவரத்திற் கூடிய சமரச சன்மார்க்க மகாநாட்டுத் தலைமை உரை, எனது தலைமை உரைகள் சிலவற்றைக் கொண்ட "**தமிழ்த்தென்றல்**" என்னும் நூலில் முதற்கண் ஒளிர்வது. அதனைத் தனி நூலாகவும் வெளியிடுதல் வேண்டும் என்று சில நண்பர் விழைந்தனர். அவர் விழைந்தவாறு, அத் தலைமை உரையை இச்சிறு நூலாக்கி, இம்முன்னுரையுடன் வெளியிடலானேன். நூலின் உள்ளுறைக் கேற்பச் "**சமரச தீபம்**" என்னும் பெயர் நூலுக்குச் சூட்டப்பட்டது.

இந்நூற்கண், சமரசம், சன்மார்க்கம், சீர்திருத்தம் முதலியன சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. **"சமரச சன்மார்க்க போதம்"** என்னும் தலைப்புக்கொண்ட வேறொரு நூல் என்னால் இயற்றப்பட்டிருக்கிறது. அதன்கண், சன்மார்க்க விளக்கம், சமரச நுட்பம், சத்தின் இயல், இயற்கைக் கூறுபாடு, கண்மூடி வழக்க ஒழுக்க இழிவு, சீர்திருத்தம், சமதர்மம், சங்க அமைப்பு முதலியன விளக்கமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. சமரச சன்மார்க்கத்தைப் பற்றிய விரிவை அந்நூலிற் காண்க.

இராயப்பேட்டை
26-1-1934 } திருவாரூர் - வி. கலியாணசுந்தரன்.

சமரச தீபம்

சாதிநிற மொழிநாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டித் தாண்டி
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்
நித்தியமாய் நிறையாய் அந்தம்
ஆதிநடு வில்லாத அகண்டிதமாய்
ஆனந்த அறிவாய் நின்று
போதலொடு வரவற்ற பூரணமே
சுதந்திரமே போற்றி போற்றி.—திரு. வி. க.

சகோதரிகளே! சகோதரர்களே!

இச்சமரச மகாநாடு ஈண்டுக் கூடுமாறு முயன்று உழைத்த கெழுதகை நண்பர்கட்கும், உழுவலன்பர்கட்கும் எனது நன்றி யறிதலைச் செலுத்துகிறேன். இம்மகா நாட்டில் தலைமை ஏற்றுக் கடனாற்றும் பேற்றைச் சிறியேற்கு நல்கிய உங்கட்கும் எனது வணக்கம் உரியதாக.

இவ்வூழி, மகாநாட்டு ஊழி என்று கூறல் மிகையாகாது. இந்நாளில் உலகில் பலதிற மகாநாடுகள் கூடுகின்றன. அவைகளினிடையே ஒரு பாங்கர் இச்சிறு மகாநாடுங் குழுமியிருக்கிறது. "இக்கூட்டம் பயனற்றது" என்று கருதுவோருமுளர்; "இது பித்தர் ஈட்டம்" என்று எள்ளி நகையாடுவோருமுளர்; இன்னும் வேறு வேறு வழியில் இதைக் குறை கூறுவோருமுளர். இவர் அனைவர்க்கும் இம்மகாநாட்டின் இன்றியமையாமை நாளா

டைவில் புலனுதல் ஒருதலை. பல்லாற்றானும் உலகை அலைத்துவரும் மறத்துறைகளை வீழ்த்தி, அறத்துறைகளை நிலைபெறுத்தவல்லது, சமரசசன்மார்க்கம் ஒன்றே, என்று உலகம் உணருநாள் சேய்மையில் இல்லை.

சமரச சன்மார்க்கத்துக்குரிய ஒரு சில நோக்கங்களைக் குறிக்கொண்டு, ஈண்டியுள்ள இம்மகா நாட்டில், சமரச சன்மார்க்கத்தின் பெற்றியை விரித்துரைத்தல் அநாவசியம். ஆயினும், அது குறித்துச் சில உரை பகர்ந்து மேலே செல்கிறேன்.

சமரச சன்மார்க்கம்

சமரசம் யாண்டுளதோ ஆண்டுச் சன்மார்க்கமும் உண்டு. சன்மார்க்கம் யாண்டுளதோ ஆண்டுச் சமரசமும் உண்டு. ஆகவே, சமரசத்தைச் சன்மார்க்க மென்றும், சன்மார்க்கத்தைச் சமரசமென்றுங் கொள்ளலாம்.

உலகிலுள்ள பன்மார்க்கங்கள் சமரசங் கூட்டாமையானும், சன்மார்க்கம் ஒன்றே சமரசங் கூட்டுதலானும், உலகம் சன்மார்க்கத்தைச், 'சமரச சன்மார்க்கம்' என்று வழங்கி வருகிறது. சன்மார்க்கத்தில் சமரசம் பொலிதலால்,அதனைச் சமரசம் என்னும் அடையின்றிச் 'சன்மார்க்கம்' என்று கொள்வது சாலும்; 'சமரசசன்மார்க்கம்' என்று விளக்கமாகக் கோடலும் பொருந்தும்.

"உலகம் பலவிதம்" என்பது பழமொழி. பலதிறப்பட்ட உலகில் சமரசம் எங்ஙனம் நிலவும் என்று சிலர் கருதலாம். "உலகம் பலவிதம்" என்பது எவரும் அறிந்ததொன்று. ஆனால் அப்பன்மை, ஒருமைச் சமரசத்தைக் கூட்டாது என்று கோடல் தவறு. உலகையும்,

பன்மையில் ஒருமை.

உலகிலுள்ள பல பொருள்களையும் உற்று நோக்குழிப் பன்மை வழி, ஒருமை நிலவலையே, அவை அறிவுறுத்தல் காணலாம். நமது யாக்கையை எடுத்துக் கொள்வோம். பல உறுப்புக்கள் சேர்ந்த ஒன்றே யாக்கை என்பது. பன்மை உறுப்புக்களிடை ஒருமை யாக்கை மிளிர்தல் கருதற்பாலது. பல செடி கொடி மரம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட ஒன்று, காடு என்று வழங்கப்படுகிறது. எனவே, பன்மையில் ஒருமை மிளிர்தலே நியதி என்க. அவ்வொருமை தேறாது, பன்மையில் மட்டும் பார்வை செலுத்தல் இடர் விளைக்கும். ஆதலால், பன்மையில் ஒருமை காண்டலே அறிவுடைமை.

உலகை உற்று நோக்குவோம். உலகம், நாடு, மொழி, இனம் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம். நாடு, மொழி, இனம் முதலிய பன்மைகளில்மட்டும் கருத்தைப் பதித்து, அதனதன் அளவில் சமரசங்கொண்டு, மக்கள் வாழ்வு நடாத்தப் புகுங்கால், பொறாமையும் போரும் பிணக்கும் நிகழ்கின்றன.

நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகள் இல்லாதொழியுமோ? ஒருபோதும் அவையில்லா தொழியா. அவை யாவும் இயற்கையில் அமைந்திருக்கின்றன. அவை எங்ஙனம் ஒழியும்?

வேற்றுமையுள்ள மட்டும் பொறாமை, போர், பிணக்கு நிகழல் இயல்பு என்று சிலர் முடிவு காண்கிறார். அம்முடிவு பொருந்திய தொன்றன்று. யாக்கையில் உறுப்பு வேற்றுமைகள் இருக்கின்றன. இவ்வேற்றுமை கொண்டு, உறுப்புக்கள் ஒன்றோடொன்று பிணங்கின், யாக்கை நிலை என்னும்? யாக்கையின் நலனுக்கு உறுப்

புக்கள் யாவும் ஒன்றி உழைக்கின்றன. அவ்வுழைப்பால் அவ்வுறுப்புக்களும் நலனுறுகின்றன. இவ்வண்ணம் நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமை கொண்டு, மக்கள் ஒருவரோடொருவர் பிணங்கிப் போரிடுவரேல், உலகில் அமைதி நிலவாது. அவ்வமைதி யின்மை, பிணங்கிப்போரிடும் மக்கட்கும் இன்பமூட்டாது. மக்கள் பிணங்கிப்போரிடாது ஒன்றி வாழ்வரேல், அவர்களிடை இசைந்த இன்பம் செறியும்.

மக்கள் வாழ்வின் நோக்கம் என்னை? இன்பம் நுகர்வ தன்றோ? வீண் போராலும் பிணக்காலும் எற்றுக்கோ பெறற்கரிய இன்பத்தை அருமை மக்கள் இழத்தல் வேண்டும்? வேற்றுமைகளிடையே ஒற்றுமை காணின் இன்பம் நுகரலாம். அவ்வொற்றுமை யுணர்வு, வேறுபாடுகளால் போரையும் பிணக்கையும் உண்டுபண்ணாது; அவைகளிடை அன்பும் ஆர்வமும் உண்டுபண்ணும். ஆதலால், வேற்றுமையில் ஒற்றுமை காணவே மக்கள் முயலல்வேண்டும்.

அவ்வொற்றுமை யுணர்வை உலகிற் கூட்டவே பல பெரியோர்கள் ஆங்காங்கே தோன்றிச் சன்மார்க்க போதனை செய்தார்கள். சன்மார்க்கம் என்பது, சத்தெனுஞ் செம்பொருளை யுணர்த்தும் மார்க்கமாகும்.

சத் மார்க்கம்.

சத்-உண்மை அல்லது கடவுள்; மார்க்கம் - நெறி. உண்மை நெறி அல்லது கடவுள் நெறியே சன்மார்க்க மேன்பது. இச்சன்மார்க்கமே உலகில் சமயம் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளில் நிலைபெறாக நின்று, வேற்றுமை யுணர்வில் பழுத்த

மக்கள், சன்மார்க்கமெனுஞ் சமயத்தையும் கூறிட்டு, வேறுபடுத்திப் போர்களைக் கிளப்பினார்கள்.

உலகிலுள்ள சமயங்கள் யாவும் சத்தெனுஞ் செம்பொருள் ஒன்றையே குறிக்கொண்டு நிற்கின்றன. அவ்வந்நாட்டார், தத்தம் மொழியில் கடவுளைப் பல பெயரால் போற்றுகிறார். அம்மொழி வேற்றுமை யன்றிப் பொருள் வேற்றுமையில்லை. ஆங்காங்குத் தோன்றிய அருளாளர் அறிவுறுத்திய சன்மார்க்கம், பின்னை நாளில், அவரவர் பெயரால் பலப்பல சமயங்களாக வழங்கப்பட்டது. அப்பெயர் வேற்றுமைகள் உலகில் சமயப் போர்களாக முடிந்திருக்கின்றன. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளுள் சமயமும் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. மக்கள் அறியாமையால், பல சமயங்களைக்கற்பித்துக் கொண்டாலும், அச்சமயங்களின் உள்ளக்கிடக்கை ஒரு பொருளையே பற்றி நிற்றல் வெள்ளிடைமலை. இது குறித்து, "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்னும் நூலின் இறுதியில் சிறிது விரித்துக் கூறியுளேன். விரிவு ஆண்டுக் காண்க. *போதிய ஓய்வு கிடைப்பின் சன்மார்க்கத்தைப் பற்றி விரிந்த நூலும் ஒன்று எழுத எண்ணி யிருக்கிறேன்.

ஒரே கடவுள்.

எந்நாட்டாரும், எம்மொழியினரும், எவ்வினத்தாரும், எல்லாரும் சத்தெனுஞ் செம்பொருளாம் ஒரு கடவுளையே பல்வேறு பெயரால் போற்றுகிறார். நாடு, மொழி, இனம் முதலியவாற்றான் வேறுபட்டார்போல வாழும் மக்களை, ஒற்றுமைப்படுத்த வல்லது, சத்துக்குரிய மார்க்

---

*ஈண்டுக் குறிக்கப் பெற்ற நூல் பின்னே எழுதப்பட்டது. அதன் பெயர் "சமரச சன்மார்க்க போதம்" என்பது.

கம் ஒன்றே என்று அறுதியிட்டுக் கூறலாம். ஆதலால் நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு, இன்பம் நுகர்தற்கு, மக்கள் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகல் வேண்டும். அவ்வொழுக்கத்தான் ஒருமை இன்பம் நுகரலாம்.

சத்தும் சன்மார்க்கமும்

சத் விளக்கம்.

சத்தெனுஞ் செம்பொருள் தோற்றக் கேடுகளின்றி, என்றும் ஒரு பெற்றியா யிருப்பது; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அதற்கு உடலில்லை; உறுப்பில்லை. அது மாற்ற மனங் கடந்து நிற்பது; சொலற்கரிய சூழலுடையது; எல்லாமாய் அல்லவுமாய் விளங்குவது; எல்லாவற்றையும் இயக்குவது. அஃதின்றி ஓரணுவும் அசையாது. அத்தகைய ஒன்றன் உண்மையை எங்ஙனம் உணர்வது?

சத்தும் இயற்கையும்.

கண்ணுக்குப் புலனாகும் இயற்கை வடிவங்களின் வாயிலாகவே அப்பரம்பொருளின் இருப்பை உணரல் வேண்டும். இயற்கையை ஆராய ஆராயச் சத்தெனுஞ் செம்பொருளின் உண்மை புலனாகும். ஊர் பேர் ஒன்றுமில்லா ஒன்றன் இருப்பை உணர்த்துங் கருவி, இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம். இயற்கையின் வாயிலாகவே சத்தெனுஞ் செம்பொருள் தன் அருட்டொண்டை நிகழ்த்தி வருகிறது. ஆகவே, சத்தை உணர்த்தும் மார்க்கம், இயற்கை இய்ற்கை என்பது கருதற்பாலது. சத்தெனுஞ் செம்பொருட்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை என்னென்று கூறுவது? அதை எழுத்தால் எழுதல் முடியுங்கொல்! சத்தெனுஞ் செம்பொரு

ளாகிய இறைவனை எனது அப்பன் என்றும், இயற்கையை எனது அன்னை என்றும் யான் கொள்கிறேன்.

செயற்கைச் சேறு.

இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்தல் இறைநெறி நிற்பதாகும். இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தாது, செயற்கைச் சேற்றில் வீழ்வது, இறைநெறி நிற்பதாகாது. இயற்கையோ டியைந்து நிற்குமாறு படைக்கப்பட்ட மகன், நெறியல்லா நெறியாகிய செயற்கையில் வீழ்ந்து கிடத்தலால், அவன், தான் பிறந்த நாடு, தான் பேசும் மொழி, தனக்குரிய இனம் முதலிய கட்டுப்பட்ட சிலவற்றைக் கடவுளாக்கொண்டு, மற்ற நாடு மொழி இனம் முதலியவற்றோடு பிணங்கி, இடரிழைத்து வருகிறான். ஒருவன், தான் பிறந்த நாடு மொழி இனம் முதலியவற்றில் சத்தெனும் செம்பொருளிருப்பதுபோல, மற்ற நாடு மொழி இனம் முதலியவற்றிலும் அப்பொருளிருத்தலை உணராமையால், அவன் வேற்றுமை உணர்வால் இடர்ப்படுகிறான். யாண்டும் அப்பொருளுண்மையை உணர்வனேல், அவன் இடர்ப்படாது இன்பம் நுகர்வன்.

இறையின்ஒருமையும், இயற்கையின் பன்மைக் கோலமும்.

சத்தெனுஞ் செம்பொருள் என்றும் ஒரு பெற்றியாய்த் திரிபு முதலிய மாறுபாடின்றி யிருப்பினும், அதனை யுணர்த்துங் கருவியாயுள்ள இயற்கை, பல்வேறு வடிவாகப் பரிணமித்துக் காட்சியளிக்கிறது. பல நாடுகள், பல மொழிகள், பல வழக்க ஒழுக்கங்கள் முதலிய யாவும் இயற்கை அன்னையின் திருவிளையாடல்கள். பன்னாடு பன்மொழி முதலியன இயற்கை அமைப்புக்

கள். இயற்கையோடியைந்த வாழ்வு செலுத்துவோர்க்கு அப்பன்மை வடிவங்களின் பெருமை புலனாகும்.

பன்மையின் மாண்பு.

“ இயற்கை அன்னை பன்மை வடிவங்களாக ஏன் காட்சியளிக்கிறாள்? அதனாலன்றோ உலகில் போரும் பிணக்கும் எழுகின்றன?” என்று சிலர் ஐயுறலாம். அப்பன்மை இல்லையேல் உலகம் நடைபெறாது. மனிதன் கை கால் உறுப்புக்களின்றித் திண்மையாக ஓரே பிண்டமாகப் பிறப்பனேல், அவனால் என் செய்தல் இயலும்? இங்ஙனே பிறவும். மனிதனது ஒவ்வோர் உறுப்பும் தன் தன் கடனாற்றித், தனக்கும், தன்னையுடைய முதலுக்கும் இன்பூட்டுவதுபோல, அவ்வந்நாட்டவரும், மொழியினரும், பிறரும் தத்தங் கடனாற்றித் தமக்கும் உலகிற்கும் இன்பூட்டல் வேண்டும். இதற்கு ஒருமை யுணர்வு வேண்டற்பாலது என்று மீண்டும் நினைவூட்டுகிறேன்.

இயற்கை வழி நிற்றல்.

எவரெவரை இயற்கை எங்கெங்கே பிறப்பிக்கிறதோ, அவரவர் ஆங்காங்கே உள்ள வழக்க ஒழுக்கங்கட்கு இயைந்த வாழ்வு நடாத்துவது, இயற்கை அன்னையை வழிபடுவதாகும். ஆங்காங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ற வண்ணம், இயற்கைஅன்னை, மொழி, பொருள் முதலியவற்றை வழங்கி இருக்கிறாள். அவ்வளவில் உள்ளநிறைகொண்டு வாழ்வது இயற்கை வாழ்வாகும். நிறைகொள்ளாது பேராசையால் மற்ற நாடுகளையும், பொருள்களையும் பற்றி வாழ விரும்புவது செயற்கை வாழ்வாகும். இதனால் இயற்கைக்கு மாறுபட்ட வினைகள் நிகழ்கின்றன. அவ்வினைகளால் ஏற்

றத் தாழ்வும், அடக்கு முறையும், பிற கொடுமைகளும் உலகிடை நுழைந்து துன்புறுத்துகின்றன; உலகில் இன்பநுகர்ச்சியும் இல்லாதொழிகிறது. இப்பொழுது உலகம் எந்நிலையிலிருக்கிறது? செயற்கை வெம்மையில் வீழ்ந்து எரிந்துகொண்டிருக்கிறது. இது நிற்க.

வாழ்வு

உடலும் உயிரும்.

வெறும் இயற்கை வாழ்வு என்றால் ஒழுங்குமுறை இல்லாததா என்று சிலர் கடாவுவர். வாழ்வை அளித்த இயற்கை அன்னை, ஒழுங்கு முறைகளை வகுக்காதொழிவளோ? இயற்கையில் உலக நடை முறைக்கெனச் சில வாழ்வு முறைகள் கோலப்பட்டிருக்கின்றன. வாழ்வு என்பது இருதிறத்தது. ஒன்று உடல் வாழ்வு; மற்றொன்று உயிர் வாழ்வு. உடல் வாழ்வு உலகியலைப்பற்றி நிற்பது; உயிர் வாழ்வு கடவுளைப் பற்றி நிற்பது. இவ்விரண்டிற்கும் மிக நெருங்கியதொடர்பு உண்டு. உயிர் வாழ்விற்கென்றே உடல் வாழ்வு ஏற்பட்டது. உடல் வாழ்வின்றி உயிர் வாழ்வு நலம்பெறல் அரிது. எனவே, கடவுள் நெறிக்கு உலகியல் இன்றியமையாததென்க.

நான்கு துறைகள்.

உலகியல் நடைமுறைக்கு நான்கு துறைகளும், கடவுள் நெறிக்கென நான்கு துறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்நான்கில் எல்லாத் துறைகளும், அடங்கலால், பிறவற்றை விரித்துக் கூறவேண்டுவதில்லை. உலகியல் செவ்வனே நடைபெறற் பொருட்டு, மக்கள், தொழிலாளர் என்றும், வாணிபர் என்றும், அரசினர் என்றும்,

பார்ப்பனர் என்றும் பிரிந்து கடனாற்றி வரலானார்கள். இப்பிரிவு இயற்கையின்பாற் பட்டது. மக்கள் அனைவரும் ஒரே கடனாற்றப் புகுவரேல், உலகம் நடைபெறாது. ஆதலால், இப்பிரிவு இன்றியமையாதது. இம்முறைவழி உலகம் இயங்கி வருகிறது. எங்குத் தொழிலாளரில்லை? எங்கு வாணிபரில்லை? எங்கு அரசினரில்லை? எங்கு ஆசிரியரென்னும் பார்ப்பாரில்லை? அவ்வத் தொழிலாளர் யாண்டும் உளர். இஃது உலகியல் முறை.

உயிர் வாழ்விற்கும் நான்கு துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை: உலகு உயிர் கடவுள் முதலியவற்றை அறிவுறுத்துங் கல்வி ஒன்று; கற்றதை நிகழ்ச்சியில் கூட்டவல்ல இல்வாழ்வு மற்றொன்று; அவ்வில்வாழ்வினால் பெறும் அன்பால் மனைவியுடன் உயிர்களுக்குதவும் அறம் வளர்ப்பது இன்னொன்று; அதன் வழி அழுக்காறு அவா வெகுளி முதலிய மாசுகளினின்றும் விடுதலை யடைந்து, எவ்வுயிரிலும் சத்தெனும் செம்பொருள் பொலிவது கண்டு, உயிர்கட்குச் செந்தண்மை பூண்டொழுகும் முடிந்த நிலை எய்துவது வேறொன்று. இந்நான்கும் மக்கட்கு வேண்டற்பாலன. இவையும் உலகில் இயங்கி வருகின்றன. எந்நாட்டில் மாணாக்கரில்லை? எந்நாட்டில் இல்வாழ்வோரில்லை? எந்நாட்டில் அறவோரில்லை? எந்நாட்டில் துறவோரில்லை?

இவ்விரு முறைகளின் வழி, வாழ்வு நடாத்துவது இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவதாகும்; அதாவது சன்மார்க்கத்தில் நிற்பதாகும்.

நமது நாடு

பண்டை இந்தியா.

நமது நாட்டில் உலகியற்றுறைகளும், உயிரியற்றுறைகளும் செம்மை நெறியில் இயங்கு முறையில் மக்கள் இயற்கை வாழ்வு நடாத்தி வந்தார்கள். வந்த நாளில், நாடு செழுமையுற்றிருந்தது. அந்நாளில் தோன்றிய கலைகளின் பெருக்கை என்னென்பேன்! வீரர்களின் பெருக்கை என்னென்பேன்! அறப்பெருக்கை என்னென்பேன்! அப்பொழுது, நமது பாரத அன்னை முடியணிந்து, கலையணிந்து, செங்கோலோச்சி, அரியாசனத்தில் வீற்றிருந்தாள்; அரசியல் குடியியல் அழகோடியங்கின; அன்பும் அருளும் ஆறாக ஓடின; எங்கணும் இன்ப வாழ்வு! எங்கணும் இயற்கையறம்! எங்கணும் சன்மார்க்கம்!

பின்னை, நாளடைவில், பாரத மாதாவின் முடியும் கலையும் செழுமையும் கொழுமையும் வளனும் நலனும் பிறவும் மெல்ல மெல்ல நெகிழ்ந்து நெகிழ்ந்து சுருங்கிச் சுருங்கி இறுகலாயின. இந்நாளில் பாரதத் தாய் அடிமைக் குழியில் வீழ்ந்து கிடக்கிறாள். இச்சிறுமைக்குக் காரணம் என்னை?

இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம்.

வாழ்விற்கென ஏற்பட்ட தொழின் முறைகளை நடாத்தி வந்த மக்களுக்குள், பிறப்பில் ஏற்றத் தாழ்வு புகுந்தமையே சிறந்த காரணமாகும். தொழிற்பிரிவுகள் பிறப்புப் பிரிவுகளாக மாறின. இப்பிறப்பு வழி ஏற்பட்ட பிரிவுகள், இயற்கைக்கு மாறுபட்டனவாகலான், அந்நாள்தொட்டு, மக்கள் சன்மார்க்கமெனும்

இயற்கை வாழ்வினின்றும் பிறழ்ந்து, துன்மார்க்க மெனுஞ் செயற்கை வாழ்வில் வீழலானூர்கள். இப் பிறழ்ச்சியால், பார்ப்பனன் பிள்ளை பார்ப்பனனுகவும், அரசன் பிள்ளை அரசனுகவும், வாணிபன் பிள்ளை வாணிபனுகவும், தொழிலாளன் பிள்ளை தொழிலாள னுகவும் கருதப்பட்டனர்.

ஆசிரியத் தொழில் பூண்டிருந்தோர், அரசர்களைத் தம் வயப்படுத்தித், தம் வழி உலகம் இயங்கவேண்டு மென்னும் எண்ணங்கொண்டு முயன்று வந்த வேளையில், இடபதேவர், மஹா வீரர், புத்தர் முதலிய அருளாளர் கிளம்பிப், பிறப்பால் வகுப்பு வேற்றுமை கூடாது என்று எதிர்த்து வந்தனர். அம்முயற்சியில் புத்தர் பெருமான் வெற்றியும் பெற்றூர். மீண்டும் நாடு சன்மார்க்கமெனும் இயற்கை அறநெறியில் இயங்கலாயிற்று. அவ்வியக் கத்தை ஓங்கவிடாது, பார்ப்பனர் சிறு முயற்சியால் தகைந்து வந்தனர். நாளுக்கு நாள் புத்தர் பெருமான் அறவுரை ஆக்கம் பெற்று வருவது கண்ட பார்ப்பனத் தலைவர் சிலர், பௌத்த சமயம் புகுந்து, பௌத்த சமய ஆக்கத்தையே மாய்த்தனர். அன்று மீண்டும் எழுந்த பார்ப்பனர், பின்னை நாளில் தமக்கு எத்தகை இடையூறும் நேராதவாறு, எவ்வக்கோட்டைகள் கட்ட வேண்டுமோ, அவ்வக் கோட்டைகள் கட்டிக்கொண்ட னர். பௌத்தமதக் கிளர்ச்சி தோன்ருதிருக்குமேல், பார்ப்பனர் தமது நலன் கருதி, இத்துணை அரண் கள் கோலி இருக்கமாட்டார். அச்சமேலீட்டான், அவர் இயற்கைக்கு மாறுபட்ட பல துறைகள் வகுத்தனர் பாவம்!

பௌத்தமும் பார்ப்பனமும்.

முதல் முதல் பெண்மக்களும், தொழிலாளர்களும் கல்வி கற்றலாகாது என்னும் சட்டம் பார்ப்பனரால் செய்யப்பட்டது. கல்வி இல்லா மக்கள் விலங்காதல் இயல்பன்றே? பெண்மக் கள் அருள் பூத்தநெஞ்சினராகலான், தங்கள் (பார்ப்பனர்கள்) கொடுமை கண்டு பொருது அறக்கிளர்ச்சிக்குத் துணை நிற்பரெனக் கருதி, அவர் கட்கு (பெண்மக்கட்கு)க் கல்வி மறுக்கப்பட்டது. வேத காலத்தில் பெண்மக்கள் பலர் பெரும் பண்டிதைமாராக இருந்தனர். ஸ்மிருதியில் பெண் கல்வி மறுப்புக் காணப் படுகிறது. ஸ்மிருதிகள் புத்தர் காலத்திற்குப் பின்னரே எழுதப்பட்டன. இதனுல் வேண்டுமென்றே பெண் கல்வி மறுக்கப்பட்டது நோக்கத்தக்கது.

பெண்மக்களும் கல்வியும்.

தொழிலாளர் தொகையில் பெரும்பான்மையோ ராக இருத்தலான், அவர் கற்றவராயிருப்பின், புத்தர் அறக்கிளர்ச்சி போன்றதொரு கிளர்ச்சி எழுமேல், அதற்கு அவர் துணை புரிவ ரென்றஞ்சி, அவர் கல்வி கற்றலாகாது என்னும் விதி செய்யப்பட்டது. பின்னும் நாளடைவில் மேல் வகுப்பார் தம்மைக் கடவுளர் என்று மற்ற வகுப் பார் கருதித் தமக்கு ஏவல் செய்யுமாறு பல விதிகள் நிறுவினர். உயர் வகுப்பார் பிறப்புரிமை, பழைய நூல் களினிடையே செருகப்பட்டது. அப்பிறப்புரிமைக் காப் புக்கெனக் கோயில்கள் மடங்கள் கட்டப்பட்டன. உயர் வகுப்பார்க்குள்ள உரிமைகளையும், மற்றவர்க்குள்ள சிறுமைகளையும் ஸ்மிருதிகளில் இன்னுங் காணலாம்.

தொழிலாளரும் கல்வியும்.

இக்கொடுஞ் சட்டங்கள் நந்தமிழ் நாட்டில் தலை காட்டியபோது, அப்பொழுது தமிழ்நாட்டில் வதிந்த

திருவள்ளுவனர் முதலியோர், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யான்" என்று பிறப்புரிமைக் கொடுமையைக் கடிந்தனர். எவர் கடிந்தும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் முறை யாண்டும் பரவலாயிற்று. நாட்டின் பெரும்பான்மை யோர், கல்வி பெருமையால் அம்முறைக்கு அடிமையாயி னர். என் செய்வது ?

இயற்கை நெறிக்கு மாறுபட்டுப் பிறப்பில் உயர்வு தாழ்வு கொண்ட செயற்கை வாழ்வு நாட்டில் நடந்து வந்தது. சன்மார்க்கம் ஒழிந்து, சாதிமார்க்கம் எழுந்தது. இச்செயற்கை முறையால் விளைந்ததென்னை? நாடு எல்லா நலன்களையும் இழந்து, அடிமைக்குழியில் வீழ்ந்ததொன்றே விளைந்த பயன்.

சாதி.

நான்கு வித தொழில்கட்கும் நான்குவித சாதி யிருத்தல் வேண்டுமென்றும், இல்லையேல் உலகம் நடை பெருதென்றும் சிலர் வாதமிடுகிருர். மக்கள் பிரிந்து, நான்கு வித தொழிலை யும் நிகழ்த்த வேண்டுமென்பதை யான் மறுக்கின்றே னில்லை. அப்பிரிவு, பிறப்புவழியில் இருத்தல் இயற்கைக்கு மாறுபாடு என்பது எனது உள்ளக்கிடக்கை. உலகில் எங்கணும் நான்கு வித முறைகளிருக்கின்றன. ஆனல் யாண்டாதல் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதப்படுதலுண் டோ? சிறப்பில் உயர்வு தாழ்வு உறல் இயல்பு. இவ்விந் திய நாட்டில், ஹிந்துக்களிடை மட்டும், பிறப்பில் சாதி கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு கொள்ளாத நாடுகள் அழிந்துபட்டனவோ? படுகின்றனவோ? அவையா வும் உரிமை இன்பத்தைச் செவ்வனே நுகர்ந்து வரு

கின்றன. பிறப்பால் சாதி கொண்டு, உயர்வு தாழ்வு கணிக்கும் இந்தியாவோ அடிமைக் குழியில் வீழ்ந்து தவிக்கிறது.

நாளடைவில் நால்வகைச் சாதி, நாலு லட்சம் சாதி களாய் விட்டன. சாதிக்குள் சாதியாகவும், கிளைக்குள் கிளையாகவும் சாதிக் குப்பைகள் பெருகிவிட்டன. திண் ணைக்கோரு சாதி, நடைக்கோரு சாதி, கூடத்துக்கோரு சாதி, மாடத்துக்கோரு சாதி, அறைக்கோரு சாதி, அடுப் புக்கோரு சாதி, கொல்லைக்கோரு சாதி, வீட்டுக்கோரு சாதி, தெருக்கோரு சாதி, கோயிலுக்கோரு சாதி, மடத்துக் கோருசாதி, கடவுளுக்கோரு சாதி - எத்துணை எத்துணைச் சாதிகள் ! நாடெங்கும் சாதி நாற்றமே வீசுகிறது.

மூன்று பாவங்கள்.

நமது நாட்டார் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால் சாதி வகுத்த தீவினையும், மக்களுள் தீண் டாமை கொண்ட தீவினையும் இப்பொழுது மூண்டெழுந்து நாட்டை அரிக் கின்றன; எரிக்கின்றன. இயற்கைக்கு மாறுபட்டு நின்றதன் பயனே, இப்பொழுது நாடு அனு பவித்து வருகிறது. கொடுமைகளைக் கண்டு இயற்கை அன்னை வாளாகிடப்பளோ? அவள் இப்பொழுது நாட் டை ஒறுத்து வருகிருள்.

அன்பர்களே! நமது நாட்டுக்குள்ள சிறுமையைப் போல வேறு எந்நாட்டுக்கேனும் உண்டோ? நமது நாட்டு மக்கள் வயிருரச் சோறு உண்கிருர்களா? அவர் கட்கு நல்லுடை உண்டா? நல்லுறக்கம் உண்டா? நமது நாட்டுக் கலைகள் எங்கே? தொழில்கள் எங்கே? எல்லாம் போயின. ஒரு சாண் வயிற்றிற்கு நம்மவர்கள் கடல்

கடந்து ஓடி மானம் இழக்கிறார்கள். இவ்வளவிற்குங் காரணமாய் உள்ள தீவினைகளுக்குக் கழுவாய் தேடிக் குறைபாடுகளைக் களைய வேண்டுவது நமது கடமை யன்றோ ?

நமது கடமை

முதலாவது நம்முன்னோர்கள் செய்த தவறுதலுக்கு நாம் கழுவாய் தேடல்வேண்டும். கழுவாய் பிராமணர் மட்டும் தேடவேண்டும் என்னும் நியதிஇல்லை. பிராமணரல்லாத மற்றவர்களும் கழுவாய் தேடக் கடமைப்படல் வேண்டும். பிராமணர்கள் மற்றவர்களைச் சிறுமைப் படுத்துவதுபோல, மற்றச் சாதியார்களும் ஒடுக்கப்பட்டவர்களைச் சிறுமைப் படுத்தி வருகிறார்கள். எல்லாரும் பெண்மக்களை வருத்துகிறார். ஆதலால், அனைவரும் தத்தங் குற்றமுணர்ந்து கழுவாய் தேடுவாராக.

கழுவாய்

ஹிந்துக்களென்று இந்நாளில் தங்களைக் கருதிக் கொள்வோர் அனைவரும், நாடோறும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஆண்டவனை நோக்கி, வழி வழி நிகழ்ந்து வரூஉம் குற்றங்களை மன்னிக்குமாறு கேட்பாராக; கேட்குமளவோடு நில்லாது, திங்கட்கொரு முறை நோன்பும் இருப்பாராக; இவ்வாறு உளத்தைத் தூய்மைப் படுத்திப் படிப்படியாகச் சில திட்டங்கள் கோலி, அவைகளைச் செயலில் நிகழ்த்த முயல்வாராக.

திட்டங்களை முறை முறையாக ஈண்டுத் தொகுத்துக் கூறவேண்டுவ தில்லை. சில குறிப்புக்களை மட்டும் நினைவூட்டுகிறேன்.

(க) பெண்ணுலகு :—பெண் ஒரு பாதி ; ஆண் மற்றொரு பாதி. இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. அங்ஙனமாக, வாழ்வின் ஒரு பாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை? உடலில் ஒரு பாதி குருதியோட்டம் குன்றினால் உடல் நிலை என்னாகும்? பாரத மாதாவின் ஒருபாதியாகிய பெண்ணுலகின் உரிமை கெடுத்தமையால், அவள் பக்க வாயுவால் பீடிக்கப்பட்டுக் கிடக்கிறாள். அந்நோய் நீங்கினாலன்றி அவளுக்கு உய்வில்லை.

"ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்........" என்றார் நக்கீரனார். பெண்மகள் பண்டை நாளில் எல்லா வழியிலும் ஒத்து வாழும் உரிமை பெற்றிருந்தாள். அவ்வுரிமை இன்பத்தை மீண்டும் அவள் நுகருமாறு ஆண் மக்கள் நடந்துகொள்ளல் வேண்டும். பெண்ணுலகக் கேட்டால் ஆணுலகுக்கும், பின்னை நாட்டுக்குமே ஊறு விளைந்துள்ளதை அன்பர்கள் கருதுவார்களாக. தாய்மைக்குரிய பெண்ணின் சிறுமை, நாட்டின் சிறுமையாதல் இயல்பு. ஆதலால், பெண்ணலன் நாடவேண்டுவது நம்பெருங் கடமை.

பண்டை நாளில் ஆண்மகனோடு ஒத்த கல்வி பெற்றிருந்த பெண், இந்நாளில் அக்கல்வி ஏன் பெறுதல் கூடாது? நீண்ட நாளாக, நாட்டின் தாயாகிய பெண், கல்வி இழந்தமையால் விளைந்த கேடுகள் எண்ணில ; எண்ணில.

ஆண்மகன் இரண்டு மூன்று பெண்களை மணஞ் செய்து கொள்வதும், பெண் மகள் உற்ற வயது

அடையா முன்னர் அவளைத் திருமணஞ்செய்து கொடுப்பதும், பெண்மகள் இளமையில் கைம்மை எய்தினால், வேறு களைகணின்றி, நரகிடை வீழ்ந்து வருந்துவதும், இன்னோரன்ன பிற நிகழ்ச்சிகளும் எத்தகைக் கொடுமைகள்! அன்பர்களே! உன்னுங்கள்.

வழுக்கி வீழ்ந்த சகோதரிகள் (Fallen Sisters) நிலையை நினைக்கும்போது கண்ணீர் பெருகுகிறது. எல்லாத் துறைகட்கும் சாதி ஏற்பட்டதுபோல, விபசாரத்துக்கெனவும் ஒரு சாதி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது! என்ன இழிவு! என்ன இழிவு! ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழும் முறை ஏற்படல் வேண்டும்.

(உ) **பிறப்பால் சாதி:**—பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டல் தொலைதல் வேண்டும். சிறப்பால் உயர்வு தாழ்வு தோன்றல் இயல்பு. உயர்குலத்தில் பிறந்தவன், எத்தகைக் கயமைத்துறையில் இழிந்து விளையாடினும், அவனை உயர்ந்தவனாகக் கருதவேண்டுமென்னும் நியதி இயற்கைக்கு அரண் செய்வதன்று. ஒருவனுக்கு உயர்வளிப்பது ஒழுக்கமன்றிப் பிறப்பன்று. தொழின் முறைபற்றி எழுந்த பிரிவு, பிறப்பைப்பற்றி எழலாயிற்று. அதைக் குலைத்தல் வேண்டும். இப்பொழுது அஃது இயல்பில் குலைந்தே வருகிறது. இன்னும் விரைந்து அதைக் குலைக்க முயலல்வேண்டும். அதற்கெனச் சில முறைகளைக் கடைப்பிடித்தல் நலம்.

(அ) பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதைத் தொலைத்தல் வேண்டும்.

(ஆ) பிறப்பு வழி உயர்வு கருதி, எவரையும் ஆசிரியராகக் கோடலாகாது. கல்வி அறிவு ஒழுக்கம்

உடைய ஒருவன், எவனாயினும், அவனை ஆசிரியனாகக் கொள்ளும் பயிற்சி முதிரல் வேண்டும்.

(இ) பிறப்புரிமை வழி நிகழும் வினைகள், வழிபாடுகள் முதலியவற்றை ஒழித்தல் வேண்டும்.

(ஈ) பிறப்பால் உயர்வு கருதி, எவருக்கும் வந்தனை வழிபாடுகள் நிகழ்த்தலே கூடாது.

(ஊ) **தீண்டாமை விலக்கல்:**—மக்களுக்குள் தீண்டாமை வகுத்ததினுங் கொடுமை பிறிதொன்றில்லை. அஃதொரு பெருநோயாய்ப் பாரதமாதாவைப் பிணித்திருக்கிறது. சிலர், தமது நலங் கருதி, ஒருபோழ்து கொண்ட முறைகள் இப்பொழுது நாட்டையே அரிக்கின்றன. தீண்டாமையால் நாட்டுக்கு நேர்ந்துள்ள இடுக்கண்களை உணர்ந்தும், இன்னும் நம்மவர்கள் அந்நோயைப் போக்கிக்கொள்ள மனங்கொள்கிறார்களில்லை.

தீண்டாமைக் குற்றம் பிராமணரிடத்தில் மட்டும் இல்லை; பிராமணரல்லாதார் பாலும் அக்குற்றம் உண்டு. தீண்டாமையில் பிராமணரினும் பிடிவாதமாகச் சில பிராமணரல்லாதாரிருத்தல் எனக்குத் தெரியும்.

பிராமணரல் தார் இயக்கம்.

'பிராமணரல்லாதார் இயக்கம்' என்று ஒன்று தோன்றியிருக்கிறது. அதன் நோக்கம் என்னை? பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாது, பிராமணரும் தாமும் எல்லா வழியிலும் ஒத்து வாழல்வேண்டுமென்பது. அதுகாரணமாகப் பலதிறப் பிணக்குகளும் நிகழ்ந்து வருகின்றன. பிராமணரல்லாதார், பிராமணருடன் சமத்துவம்பெற முயல்வது போற்றற்குரியதே. ஆனால், பிராமணருடன்போராடி, அவருடன் ஒத்துவாழ எண்ணும் பிரா

மணரல்லாதாருள் எத்துணைபேர் தீண்டாமை விலக்கை ஏற்றுக்கொள்பவர்? அதற்கு உழைப்போர் எத்துணை பேர்? ஒரு சிலர் இருக்கிறார். பெரும்பான்மையோர்க்குத் தீண்டாமை விலக்கில் கவலையுண்டா என்பதே எனது கேள்வி. "பறையர், பறையர், தீண்டக்கூடாது" என்று ஒதுங்கிப் பார்ப்பனருடன் மட்டும் சமத்துவத்துக்குப் போராடினால், அப்போராட்டத்துக்கு இயற்கை அன்னை அருள் செய்வளோ?

பிராமணரல்லாதார், பிராமணருடன் கலக்க முயல்வதுபோலத் தீண்டாதார் என்றுசொல்லப்படும் மக்கள், தம்முடன் கலக்கப் பிராமணரல்லாதார் இடந்தரல் வேண்டும். அந்நல்லெண்ணம் பிராமணரல்லாதாரிடத்தில் வேரூன்றினால், அவர் முயற்சிக்கு ஆண்டவன் துணை கிடைக்கும். தீண்டாமை போக்கப் பிராமணரும், மற்றவரும், எல்லாரும் முயல்வாராக.

தீண்டாமை போக்க முன்னை நாளில் சில அன்பர்கள் முயன்றார்கள்; இந்நாளில் காந்தியடிகள் முயன்று வருகிறார்கள். இப்பெரியோர்கள் சொல்வழி நின்று கடனாற்றச் சாதிக்கூட்டத்தார் ஒருப்படுகிறாரில்லை; ஆனால் அவர்களுடைய திருவுருவப் படங்களைப் பூசிக்கவும், அவைகட்குத் திருவிழா செய்யவும் ஒருப்படுகிறார். தீண்டாமையை விட்டொழிக்க நம்மவர்கள் நடுக்குறுகிறார்கள்!

போலிச் செயல்கள்.

கோயில், குளம், தெரு முதலிய பொது இடங்களில்லாதல் ஏழை மக்கட்கு உரிமையுண்டா? இல்லையே! தீண்டாமை யுள்ளமட்டும் நாட்டுக்கு உய்வில்லை என்பது ஒருதலை. வாய்ச் சீர்திருத்தம், வாய் வேதாந்தம்

இவைகளால் பயன் விளையாது. தீண்டாமை உன்னும் மனோநிலை மாறுதல் வேண்டும். சாதியுடையார், சாதியில்லாத ஆதிதிராவிடர் முதலியோரிடம் நன்றாகப் பழகல்வேண்டும். அப்பழக்கத்தால் வேற்றுமை யொழியும். சாதியில்லாத ஆதிதிராவிடர்களிற் கல்வி அறிவு ஒழுக்கமுடையாரைக் கொண்டு, சில தெய்வ வினைகளும் நிகழ்வித்தல் வேண்டும்.

கோயில்கள் :—சத்தெனுஞ் செம்பொருளை உன்னுதற்கும், போற்றுதற்கும் உரிய இடமாகக் கோயில்கள் கட்டப்பட்டன. நாளடைவில் அக்கோயில்களிலும் சாதிப்பேய் நுழைந்து விட்டது. ஒரு கூட்டத்தார் இங்கும், மற்றொரு கூட்டத்தார் உங்கும், இன்னொரு கூட்டத்தார் அங்கும் நின்று கடவுளை வழிபடல் வேண்டுமாம்! கடவுள் முன்னிலையிலுமா உயர்வு தாழ்வு? கடவுளை மரம் செடி கொடி பாம்பு சிலந்தி யானை முதலியன பூசித்ததாகப் புராணங்கள் புகல்கின்றன. கடவுள் உருவங்களின்மீது ஈக்கள் மொய்க்கின்றன; பல்லிகள் ஓடுகின்றன. இவைகட்கெல்லாம் இறைவனைத் தொடும் உரிமை யிருக்கும்போது, ஆறறிவுடைய மக்களுக்கா அவ்வுரிமையில்லை? சாதியார் கொடுமை என்னே! என்னே!

கோயில்களை எப்படித் திருத்துவது? இரண்டு வழி குறிக்கலாம். ஒன்று, சாதிக்கோயில்களுக்குப் போகாமலிருப்பது; மற்றொன்று சத்தியாக்கிரஹத்தால் மக்களுரிமையை நிலைநாட்டுவது.

மடங்கள் :—பௌத்த சமயத்துக்குப் பின்னரே மடங்கள் பெரிதும் ஏற்பட்டன. சமயஞானத்தை

வளர்ப்பது மடங்களின் நோக்கம். ஒருபற்றுமில்லாத 'சந்நியாசிகளே' மடாதிபதிகளாக அமர்கிறார்கள். அச் சந்நியாசிகளைத் தலைமைகொண்ட மடங்களிலும் சாதிப் பேய் புகுந்திருக்கிறது!

"மடங்களையும், மடாதிபதிகளையும் குறை கூற வேண்டும்" என்பது எனது நோக்கமன்று. நீண்ட நாள் பழக்க ஒழுக்கத்துக்கு மடங்களும் மடாதிபதிகளும் அடிமைப்பட நேர்ந்திருப்ப தொன்றையே ஈண்டுக் குறிப்பிடுகிறேன். யாண்டாயினுமுள்ள ஒரு மடாதிபதி, நாட்டுநிலை சமயநிலை முதலியவற்றை எண்ணிச் சமரசத்தை வளர்க்கப் புறப்படுவரேல், அவரைத் தெய்வம்போல் போற்றுவேன். காலதேச வர்த்தமானத்துக்கேற்றவாறு முறைகளை மாற்றுவதால் தீங்கு நேரிடாது; நலனே உறும். மடங்களையும், மடாதிபதிகளையும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் பொது மக்கட்கு உண்டு. சத்தியாக்கிரகம் சிறந்தகருவி என்று சொல்லவேண்டுவதில்லை.

பிராமணர் பிராமணரல்லாதார்

இப்பொழுது தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு யாண்டும் இருத்தல் உண்மை. இப்பிணக்கு, தொடக்கத்தில் அரசியலை ஒட்டி எழுந்தது. இப்பொழுது அது சமூகத்தில் குடியேறிவிட்டது. அதனால் விளைந்து வரும் பயன் என்னை? பிராமணர்களுக்குள் மிக உரமான ஒற்றுமை நிலவி வருகிறது. பிராமணர் மகாநாடுகள் ஆங்காங்கே கூடி வருகின்றன. சாதி வரம்பு கடந்து வாழ்வு நடாத்திய சில பிராமணரும் பழைய இருட்டில் புகலாயினர்.

சாதி மகாநாடுகள்.

பிராமண ரல்லாதாருள் என்ன நிகழ்ந்து வருகிறது? பிராமணரல்லாதாருள் ஒவ்வொரு சாதியாரும் சாதி மகாநாடு கூட்டி வருகிறார். 'சாதி அழிவிற்காக இம் மகாநாடுகள் கூட்டப்படுகின்றன' என்று சிலர் சொல்கிறார். அந்நுட்பம் எனக்கு விளங்கவில்லை! பழையபடி சாதிகள் உரம்படுமென்று எனது சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு சாதியாரும் சட்டசபை இருக்கைகளில் இடம்பெறத் தீர்மானஞ் செய்வது என்ன காட்டுகிறது? ஆகவே, பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கால் ஒற்றுமை விளையாது; வேற்றுமை விளைந்து வரல் கண்கூடு.

இஃது அரசியல் மகாநா டன்றாதலின், ஈண்டு அரசியல் துறைபற்றிப் பலபடக் கூற யான் விரும்புகிறேனில்லை. எடுத்த பொருளுக்கேற்ப இரண்டோர் உரை பகர விழைகிறேன்.

நாட்டுக் குரிய தொண்டு.

நமது நாட்டில் இரு வினை நிகழல்வேண்டும். ஒன்று நாட்டு விடுதலை; மற்றொன்று நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சமரசப்படுத்துவது. அதற்கோர் அமைப்பு வேண்டும்; இதற்கோர் அமைப்பு வேண்டும். முன்னதற்குப் புதியதோர் அமைப்பு காண வேண்டுவதில்லை. காங்கரஸ் என்னும் பழைய அமைப்பு ஒன்றிருக்கிறது. அரசியல் விடுதலைப் போருக்கு அதைக் கருவியாகக் கொள்ளலாம். மற்ற அமைப்புக்களில் அரசியலைப் புகுத்தாது, சமூக சீர்திருத்தத்துக்கென், அவைகளைப் பயன்படுத்தலாம். இவ்விண்ணப்

பத்தை "ஜஸ்டிஸ்" கட்சி பிராமணரல்லாத தலைவரை நோக்கிச் செய்துகொள்கிறேன். "ஜஸ்டிஸ்" கட்சியார் காங்கரஸில் சேர்ந்து, தேசத்தொண்டு செய்யுமாறும், அன்னார் தமது தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைச் சமூக சீர்திருத்தத்துக்கெனப் பயன் படுத்துமாறும் வேண்டுகிறேன்.

விதிமுறை அமைப்பை விரும்புவோர் அந்நெறி பற்றிச் செல்வாராக. அவ்வமைப்பை விரும்பாதார் யான் குறிப்பிடுஞ் சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்து உழைப்பாராக. அது மக்களாகப் பிறந்த அனைவர்க்கும் உரியது.

சன்மார்க்க சங்கம்

சன்மார்க்க சங்கத்தைப்பற்றி முன்னர் ஒருமுறை "நவசக்தி" பத்திரிகையில் எழுதியுள்ளேன். அதன் ஒரு பகுதியை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுக ஒரு கூட்டம் வேண்டற்பாலது. அதுவே "சன்மார்க்க சங்கம்" என்பது.

சங்கம்

(க) இச்சங்கநோக்கம் என்னை? (உ) சங்க அங்கத்தவர் யாவர்? (ங) நிர்வாக அங்கத்தவர் யாவர்? (ச) அமைச்சர் எவர்? (ரு) தலைவர் எவர்? (சு) சந்தா எவ்வளவு? இவ் வினாக்கட்கு யான் இறுக்கப்புகும் விடை சிலர்க்கு வியப்பூட்டும்.

(க) சங்க நோக்கத்தையும், அந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க முறைகளையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். அவைகள் தொன்று தொட்டு நிலவி வருவன. ஆனால் காலநிலைக் கேற்றவாறு அவைகள்

ஓரளவில் நடைமுறைப் பொருட்டுக் கணிக்கப்படல் வேண்டும். ஈண்டு அவைகளைப்பற்றிப் பொதுப்படச் சுருங்கச் சொல்கிறேன்.

உயிர்த்தொண்டு கடவுள் தொண்டாம்.

சத்தாகிய கடவுள், யாண்டும் வீற்றிருத்தலால், எவ்வுயிர்க்கும் மனமொழி மெய்களால் தீங்கு நிகழ்த்தாது, தன்னுயிரைத் தான் பரிந்து ஓம்பு மாறுபோல், மன்னுயிரையும் ஓம்பி, அவ்வுயிர் நலன் கருதித் தொண்டு செயல் சங்கத்தின் தலையாய நோக்கம். இப்பெரு நோக்கத்தை நிறைவேற்ற அகமுகத்திலும் புறமுகத்திலும் பணி செய்தல் வேண்டும்.

அகமுகப் பணிகளாவன:—அகத்திலுள்ள மெய்ப்பொருளைக் காணவேண்டி, அழுக்காறு அவா வெகுளி முதலிய தீ நீர்மைகளைக் களைதல், கொலை களவு கள் காமம் பொய்யெனும் ஐம்பெரும் பாவம் நிகழாதவாறு தன்னைக் காத்தல் முதலியன.

புறப்பணிகளாவன :—தேசத் தொண்டு; அத்தொண்டிற்கு இடையூறாக உள்ள குறைகளைக் களைதல் முதலியன. தேசத் தொண்டும் கால நிலையைப் பொறுத்து நிற்பது. இப்பொழுது நமது நாட்டிலுள்ள குறைபாடுகளில் கவலை செலுத்தி, அவைகளைக் களையப் பாடுபடல் சிறந்த தேசத் தொண்டாகும். சுதேசியம், பெண்ணுரிமை, தீண்டாமை விலக்கல், வகுப்புப் பூசலொழித்தல், கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்தல், தேசத்திற் பிறந்தாரிடை அன்பு வளர்த்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை அன்பு வழியில் தொலைத்தல் முதலிய அறத்துறைகளை ஓம்ப முயலுதல் தற்காலத்துக்

குரிய சிறந்த தேசத் தொண்டாகும். இதைப் பற்றி இன்னும் விரிக்கிற் பெருகும்.

(௨) உலகிலுள்ள அனைவரும் சன்மார்க்கத்தை விரும்புகிறார்; ஆனால் சிலரே விரும்பும் வழி நிற்க முயல்கிறார்; அவ்வழி நிற்பவரோ மிகச் சிலர். இம் முத்திறத்தாருஞ் சன்மார்க்க சங்க அங்கத்தவராவர். ஆகவே, இவ்வுலகிலுள்ள கடவுள்பிள்ளைகள் அனைவரும் சன்மார்க்க சங்க அங்கத்தவரென்க.

(௩) (அவருள்) நிர்வாக சபையார்: தம்முயிர் போல், மன்னுயிரையும் கொண்டு ஒழுகும் அருளொழுக்கத்தில் தேர்ச்சி பெற்றவர்.

(௪) அமைச்சர்: நமது கண்முன் காட்சியளிக்கும் இயற்கை அன்னையார்.

(௫) தலைவர்: சத்தெனுஞ் செம்பொருளாகிய அருட் கடவுள்.

(௬) சந்தா: உயிர்களிடத்துச் செலுத்தும் அருள்.

இவைகள் சங்கத்தின் அமைப்பாகும். சன்மார்க்க சங்கத்தின் அமைப்பின் வகை குறித்துச் சமயம் நேர்ந்துழி இன்னும் விரித்துக் கூறுவேன். இச் 'சன்மார்க்க சங்கமே' என்னால் அடிக்கடி குறிப்பிடப்படுவது.

இப்பெருஞ் சங்கத்துக்குக் கிளைகளாகப் பல சங்கங்கள் ஆங்காங்கே அமைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வீட்டிலும் கிளைச்சங்கம் அமைக்கலாம். வீட்டுத் தலைவனும் தலைவியும் முறையே சங்கத்தின் தலைவராகவும் அமைச்சராகவும் இருக்கலாம். அவ்வீட்டிலுள்ள

மற்றவர்கள் சங்கத்தின் அங்கத்தவர்களாகலாம். இவர்கள் சங்க நோக்கத்தை நிறைவேற்ற முயலல் வேண்டும்.

சன்மார்க்க போதனைக்கென ஒரு சங்கம் ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்துக் கொள்ளலாம். சங்கத்துக்கெனப் பெருங் கட்டிடங்கள் எழுப்ப வேண்டுவதில்லை. ஓர் அழகிய சிறு நிலையம் சாலும். சங்கத்துக்கெனத் தலைவர் அமைச்சர் முதலியோரைத் தெரிந்தெடுத்தல், சந்தா சேர்த்து வரவு செலவு கணக்குப் படித்தல் முதலியன வேண்டாம்; வேண்டாம். தேர்தலும், பொருளீட்டமும் மக்களைச் சன்மார்க்கத்தில் செலுத்தா. அவை முனைப்பை எழுப்பிப் போர் மூட்டும். சங்கத்தின் எவ்வினைக் காதல் பொருள் வேண்டியிருப்பின், அவ் வினைக்கெனப் பொருள் சேர்த்து, அவ்வினை யாற்றல் வேண்டும். பின்னை அப்பொருளில் மிகுதி நின்றால், அதை உடனே ஏழை மக்கட்குப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும். பெரும்பொருள் செலவாகும் வினை ஒன்றும் சங்கத்தில் நடைபெறுதல் கூடாது. சங்கத்துக்கெனத் தனிநிதி கூடவே கூடாது. பெருநிதியால் தற்கால மடங்களும், கோயில்களும் பேயுறையும் இருட் குகைகளாக மாறிய தோன்றே நமக்கு எடுத்துக்காட்டு. ஆதலால், விலங்குணர்வும் பேயுணர்வும் தோன்றாத முறையில் சங்கத்தை நடாத்தல் வேண்டும். அச்சங்கத்தில் அருளொழுக்கத்தில் முதிர்ச்சி பெற்றாரைக் கொண்டு சன்மார்க்க போதனை செய்விக்கலாம். சங்க நோக்கத்தை ஒட்டிப் பலதிறத் தொண்டுகள் செய்யலாம்.

சன்மார்க்கம் இன்னது என்றும், சன்மார்க்கத்துக்கு இடையூறாகவுள்ள கொடுமைகள் இன்ன இன்ன என்றும் மிகத் தெளிவாக இராமலிங்க சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அவ்வறிவுறுத்தல்களிற் சில வருமாறு:—

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணம் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வணங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே"

"கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெறஎவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதிஅருள் வழங்கினைஎன் றனக்கே
உலைவறும்இப் பொழுதேநற் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மையுரைத் தவ
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுதம் அளித்தோய் [னே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே"

"மதமென்றும் சமயமென்றும் சாத்திரங்க ளென்றும்
மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்
பதமென்றும் பதமடைந்த பத்தரநு பவிக்கப்
பட்டனுப வங்களென்றும் பற்பலவா விரிந்த
மதமொன்றுந் தெரியாதே மயங்கியஎன் றனக்கே
வெட்டவெளி யாயறிவித் திட்டஅருள் இறையே
சதமொன்றுஞ் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே"

"சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகளெல்லாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதியுணர்ந் தோர்புகழுஞ் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவையுள்ளே பெற்றுமகிழ்ந் தேனே"

"தயையுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே இங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருள்நெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகஎன் றெனக்கிசைத்து நண்புறுசற் குருவே
உயலுறும்என் உயிர்க்கினிய உறவேஎன் அறிவில்
ஓங்கியபேர் அன்பேஎன் அன்பிலுறும் ஒளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே"

"அருளுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே ஆதலினால் அவருடனே கூடித்
தெருளுடைய அருள்நெறியில் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரும் ஒளியே
மருளுடையார் தமக்குமருள் நீங்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே"

"தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்

தங்கமே பெருஞ்சற் சங்கநீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்தனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்"

"மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே—ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீர்இந் நாள்"

இச்சன்மார்க்கத்தில் சேருமாறு எல்லாரையும் வேண்டுகிறேன். வந்தேமாதரம்.

திரு. வி. க.

கணபதி வாசகசாலை,
12. ... கோயில் தெரு,
காஞ்சீபுரம்.
K. V. A. MUDALIAR,
... Amman Koil St.,
...RAM.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த்தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ...	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ...	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே ...	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
சமரச சன்மார்க்க போதம்	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ...	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் ...	0	4
முருகன் அருள்வேட்டல்	0	4
காரைக்காலம்மையார் திருமுறை (அரும்பதக் குறிப்புரையுடன்)	0	6
சமரச தீபம்	0	2

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஒரே கடவுள் ஒரே சமயம்

மக்கள் அனைவருஞ் சகோதரர்

சமரச சன்மார்க்க போதம்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

இயற்றியது.

உலகம் விரும்பும் சமத்துவம், சுதந்திரம், சகோதரநேயம் என்னும் மூன்றையும் இந்நூல் அறிவுறுத்துகிறது.

மக்கள் வளர்ச்சிக்குத் தடைகளாயுள்ள மூட வழக்க ஒழுக்கங்களை ஒழிப்பதற்குரிய சீர்திருத்த முறைகளை இந்நூல் நன்கு விளக்கியிருக்கிறது.

ஒரே கடவுள் ஒரே சமயம் என்னும் உண்மையை இந்நூலிற் காணலாம்.

இயற்கை நுட்பங்கள் இந்நூற்கண் இனிது ஓதப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அவசியம்.

விலை அணா 8.

வேறு பதிப்புகள்

		ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)	...	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	...	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத உரையும் சரித்திரக் குறிப்பும்)	...	0	12
முருகன் திருவருட்பா	...	0	8
தேவி தோத்திர மஞ்சரி	...	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)		1	4
விநாயகர் பனுவல் திரட்டு	...	0	6
திருப்போரூர்ச் சந்நிதி முறைத் திரட்டும், அரும்பத உரையும் - கிளேஸ்	...	0	5
ஷி ரப்	...	0	3
சிவபுண்ணியத் தெளிவு	...	0	3

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.